

சுந்தர ராமாயணம்

கணையாழியும் சூளாமணியும்

பி. ஸ்ரீ

1. துயில் மந்திரம்

அனுமன் சீதைக்குக் கணையாழி கொடுப்பதும், சீதை அனுமனுக்குச் சூடாமணி கொடுப்பதும் சுந்தர காண்டத்தின் இதயப் பிரதேசம் எனக் கருதப்படுகின்றன.

இப்பகுதி சீதை உயிர் துறக்க முயற்சி செய்வதுடன் ஆரம்பமாகிறது. இம்முயற்சி வால்மீகி ராமாயணத்திலே இருபத்தெட்டாவது ஸர்க்கத்தில் பிரஸ்தாபிக்கப்படுகிறது. அதைச் சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம்.

வால்மீகத்திலே சீதை தனிமையுரை

ராட்சஸேந்திரனின் குரூர வார்த்தையைக் கேட்டுச் சீதை மனம் நொந்து, காட்டில் சிங்கத்திடம் சிக்கிக் கொண்ட பெண் யானை போல் நடுங்கினாள். அரக்கியர்களுக்கிடையே அகப்பட்டுக் கொண்டோமே என்று பயந்திருந்தவள்; அந்த நிலையில் ராவணனுடைய சொற்களும் பயமுறுத்தவே. ஜன சஞ்சாரமில்லாத காட்டில் தன்னைச் சேர்ந்தவர்களால் கைவிடப்பட்ட ஒரு சிறு பெண்ணைப் போல் புலம்பலுற்றாள்.

'இன்னும் உயிர் போகவில்லையே; சுகமென்பதே இன்றி எல்லையற்ற துக்கத்தை அடைந்திருந்தும் என் மனம் தூள் தூளாகப் போகவில்லையே! இவ்வளவு கஷ்டத்தையும் இப்படிப் பொறுத்துக் கொண்டிருப்பதைக் காட்டிலும் நான் ஏன் தற்கொலை செய்து கொள்ளக் கூடாது? ஆனால் அது பெரும் பாதகமல்லவா?' என்று இவ்விதமாகச் சீதையின் தனிமையுரை தொடங்குகிறது வால்மீகத்திலே.

தான் இருக்கும் நிலையில் தற்கொலை தோஷமில்லை யென்றும் உடனே எண்ணுகிறாள். 'எப்படியும் ராவணன் என்னைக் கொல்வானென்பது திண்ணம். அவன் கையால் கொலையுண்டு சாவதை விட நானே உயிர் விடுவதில் தோஷம் இருக்க முடியாது' என்கிறாள்.

ராஜத் துரோகம் காரணமாக (மறுநாள் காலையில்) கொலைத் தண்டனை அடைய வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டுச் சிறைச் சாலையில் அடைக்கப் பட்டிருக்கும் திருடன் இரவை எவ்வளவு விசனத்துடன் கழிப்பான்! — அப்படியல்லவா ராவணன் தவணையாகக் கொடுத்திருக்கும் இரண்டு மாதங்களையும் சீதை கழிக்க வேண்டியிருக்கிறது?

இந்த நினைவு வரவே, 'ஐயோ, ஹா ஸ்ரீராமா! ஹா லக்ஷ்மணா! ஹா சுமத்திரையே! என்னிடம் பெருங் கருணையுள்ள கௌஸல்யா தேவி! நான் பெருங் கடலில் சுழல் காற்றினால் தாக்கப்பட்டு முழுகுகின்ற மரக்கலம் போல் பாக்கியம் குன்றி நாசமடையப் போகிறேன்' என்று புலம்புகிறாள்.

ராம லட்சுமணர் இருவரும் ஏற்கெனவே கொல்லப் பட்டிருக்க வேண்டும் என்ற எண்ணமும் தோன்றுகிறது. 'மான் வடிவம் எடுத்து வந்த அந்த ராட்சஸப் பிராணி இரண்டு புருஷ சிங்கங்களையும் நாசஞ் செய்திருக்க

...ண்டும். இல்லாவிட்டால் என்னைக் காப்...ற மாட்டார்களா ?' என்கிறாள் ஒரு கணம்.

அடுத்த கணமே 'ஓர் அற்ப ராட்சஸப் பிராணிக்கு ராம லட்சுமணர்களை நாசஞ் செய்யவும் சக்தியுண்டா ?' என்ற நினைவும் வருகிறது. ஆகையால் காலதேவனாகிய யமனே மான் வேடம் பூண்டு துரதிர்ஷ்டம் பிடித்த தன்னை ஆசைகாட்டி மோசஞ் செய்திருக்க வேண்டும் என்கிறாள்.


'இல்லாவிட்டால் ராமனையும் பிறகு லட்சுமணனையும் என்னைப் பிரிந்து போகும்படி துரத்தியிருப்பேனா ?' என்கிறாள்.

ராமனுடைய திருமுகம் பூர்ண சந்திரனைப் போல் இவளது சித்தாகாசத்திலே உதயமாகிறது. அந்த வீரத் தோள்களும் அகக் கண்ணுக்கு இலக்காகின்றன. ராமனது சத்திய விரதமும் நினைவிற்கு வருகிறது.

'நான் அரக்கர்களால் மரணமடையப் போகிறது உமக்குத் தெரியவில்லையே ! அந்தப் புயங்கள் என்னைக் காப்பாற்றச் சக்தியற்றனவோ ?' என்று கலங்குகிறாள்.

'நீராவது தந்தையின் ஆணையை நியமத்துடன் முடித்துக் கொண்டு காட்டிலிருந்து திரும்பிச் சென்று கவலை ஒழிந்தவராய்த் தாய்மார்களோடு வாழ வேண்டும். இது என் மனப்பூர்வமான வேண்டுகோள்' என்கிறாள்.

இந்த எண்ணம் தோன்றியதும் இதன் தொடர்ச்சியாக, 'நானோ பாக்



கியமற்றவள்; என் தவமும் விரதங்களும் வீணாயின' என்ற எண்ணமும் வந்து விடுகிறது.

இதே சங்கிலித்தொடரில், 'உம்மிடம் நான் வைத்திருக்கும் ஆசைக்கோ எல்லையில்லை. அப்படியிருந்தும், உயிரைவிடத்தான் போகிறேன்—ஆம், இந்தப் பாழும் பிராணனை' என்ற எண்ணமும் தொத்திக் கொள்கிறது.

இப்படி, தற்கொலை செய்து கொள்ள வேண்டியது தான் என்ற முடிவிற்குக் கொண்டு வந்து விடுகிறது சீதையின் தனிமையுரை. இனி, எந்த விதமாகத் தற்கொலை செய்து கொள்வது?

விஷத்தைக் குடித்து உயிரை முடித்துக் கொள்ளலாம்; அல்லது கூர்மையான வாள் போன்ற ஆயுதங்களாலும் உயிரைப் போக்கி விடலாம். இந்த இரண்டு முக்கிய சாதனங்களும் சீதை நினைவிற்கு வருகின்றன.

ஆனால் சீதைக்கு விஷமோ ஆயுதமோ எப்படிக் கிடைக்கும்? 'அரக்கன் வீட்டில் விஷத்தையாவது வாளையாவது எனக்குக் கொடுத்து உபகரிப்பவன் ஒருவனும் இல்லையே!' என்று எண்ணாததெல்லாம் எண்ணிப் புண்ணாகிறது நெஞ்சம்.

விஷத்தையோ ஆயுதத்தையோ தனக்குக் கொண்டு வந்து கொடுக்கக் கூடியவர்களை **உபகாரிகள்** என்றே கருதுகிறாள். விஷத்தையும் கொலை புரியும் ஆயுதங்களையும் இப்போது தன்னை **அறநெறியில் காப்பாற்றக்கூடிய சாதனங்கள்** என்றும் மதிக்கிறாள்.

'என்னைக் கெடுப்பதற்கு வேண்டிய சகல சாதனங்களும் நினைத்தவுடன் கிடைக்கும். என்னைத் தர்ம மார்க்கத்தில் காப்பாற்றக் கூடிய சாதனங்கள், பாபிகள் நிறைந்த இந்த நகரத்தில் கிடைக்குமோ?' என்பதாகச் சீதையின் இதயக் கதறலை ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸையங்கார் எடுத்துக்காட்டுவது வால்மீகியின் கவியுள்ளத்தைத் திறந்து காட்டுவதுதான்.

ராமன் தந்தையின் ஆணைக்கு இணங்க வனவாசத்தை முடித்துக்கொண்டு விரதம் முடித்தவனாய்க் கவலை ஒழிந்தவனாய்ச் சிரமம் தீர்ந்தவனாய்ச் சுகித்திருக்க வேண்டுமென்று சீதை மனப்பூர்வமாக வேண்டிக் கொண்டாளல்லவா? அதைத் தொடர்ந்தே உள்ளம் படு வேகத்தில் தனிமையுரையை முடித்துக் கொண்டு தற்கொலைக்குச் சித்தமாகி விடுகிறது என்பது வால்மீகி-சித்திரத்தின் அதிமுக்கிய அம்சமாகும்.

வன வாசத்தை முடித்துக் கொண்டு அயோத்திக்குப் போனதும் ராமன் முடிசூடிக் கொள்வான், ராஜ்ய போகங்களையும் அனுபவிப்பான் என்னும் எண்ணமும் சீதைக்கு வரக் கூடியது தானே? 'நீரோ ஆனந்தமாய்க் காலங்கழிப்பீர்: நானோ உம்மிடம் எல்லையில்லாத ஆசையை வைத்துக் கொண்டே பாக்கியமற்றவளாய்ப் பிராணனை விடப் போகிறேன்' என்பது, வால்மீகி சித்திரத்திலே சீதை தனிமையுரையில் இறுதியான சிந்தனை—அலையாக வருவது பொருத்தமானதே.

வால்மீகியின் கவியுள்ளத்தை இப்பகுதியில் நன்றாக ரஸித்து அனுபவித்திருக்கும் ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸையங்கார், இந்த இறுதிப் பகுதிக்குப் பின் வருமாறு விளக்கம் தந்திருக்கிறார்:

'ஒரு தேவ! நீர் பிதாவின் ஆக்ஞைப்படி வனவாஸஞ் செய்து முடித்து,



…யோத்யைக்குத் திரும்பிப் போய், …கல கஷ்டங்களுந் தீர்ந்து ராஜ்யத்தில் அபிஷேகஞ் செய்யப்பட்டு, விசால நேத்ரங்களுள்ள ஸ்திரீகளுடன் ஆநந்தமாய்க் காலங் கழிப்பீர். நானோ பாக்யமற்றவள்; இது வரையில் அநுஷ்டித்த தபஸும் விரதங்களும் வீணாயின; உம்மிடத்தில் வைத்த ஆசைக்கோ எல்லையில்லை; அது என் மரணத்திற்கு ஹேதுவாயிற்று; ஆகையால் இந்தப் பாழும் பிராணனை விடப் போகிறேன்……'

ஒரு வாய்ப்பு

வால்மீகி சித்திரத்தை இன்னும் கொஞ்சம் தொடர்ந்து உற்று நோக்குவோம்.

'அரக்கிமார் விழித்துக் கொள்வதற்கு முன் நான் இறக்க வேண்டியது அவசியம்' என்று சீதை கருதியதாகவும் ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸையங்கார் தமது சுந்தரகாண்ட மொழி பெயர்ப்பில் கூறியுள்ளார். இதனால் அரக்கியரெல்லோரும் ஏககாலத்தில் உறங்கிக் கொண்டிருந்ததாக ஏற்படுகிறது.

திரிஜடையும் உறங்கிக் கொண்டிருந்தாள் என்றுதான் தெரியவருகிறது. இல்லா விட்டால் அவள் சீதைக்கு ஆறுதல் கூறித் தற்கொலை முயற்சியைத் தடுத்திருப்பாளல்லவா?

இப்படித் திரிஜடை உள்ளிட்ட அரக்கியர் அனைவரும் ஏககாலத்தில் உறங்குவது சாத்தியமா? காவலாளிகள் களைத்துப் போய்த் தங்கள் கடமையை மறந்தோ, மதுபானம் செய்து மயங்கியோ உறங்கிப் போயிருப்பார்கள் என்று கருதினாலும், இத்தகைய சந்தர்ப்பத்தில் திரிஜடையும் உறங்கிப்போகிறாளே, — சீதைக்கும் அனுமனுக்கும் சந்திப்பும் சம்பாஷணையும் நிகழ ஒரு வாய்ப்பை அளிக்க வேண்டுமென்றே உறங்கிப் போவது போல!

கம்பனின் உபாயம்

கம்பனும் அரக்கியர்களைத் தூங்க வைக்கிறான்: திரிஜடையையும் சேர்த்துத்தான். ஆனால் கம்ப சித்திரத்திலே இவர்கள் இயற்கையாகத் தூங்கவில்லை.

சீதையைச் சுற்றியுள்ள கட்டுக்காவலைக் குறிக்கும் போது 'தெறு காவல்' என்ற சொற்றொடரை உபயோகிக்கிறானல்லவா? அதாவது, 'சுடுகிற காவல், அழிக்கிற காவல்' என்ற பொருளில் காவலைக் குறிப்பிடுகிறான்.

'தெறு காவல்' என்றால் நிகழ்காலத்தில் தான் 'சுடுகிறது' அல்லது 'அழிக்கிறது' என்பதில்லை. 'சுட்ட காவல்; சுடுகிற காவல்; சுடப்போகும் காவல்' என்று மூன்று காலத்திலும் சுடக்கூடியது காவல் என்பது பொருள். இப்படியே முக்காலத்திலும் 'அழிக்கக் கூடிய தன்மை வாய்ந்தது காவல்' என்பதும் 'தெறு காவல்' என்ற சொற்றொடரின் புதை பொருளாகும்.

துப்பாக்கியும் தோளுமாகக் கடுமையாய் ஸர்வ ஜாக்கிரதையுடன், 'வந்து பார், சுட்டுத் தள்ளிவிடுவேன்; அழித்து விடுவேன்' என்று பயமுறுத்துவது போல் காவல் செய்யும் காவலாளியைப் பார்த்திருக்கிறீர்களா? அரசாங்கத்திற்கே அபாயகரமான ஓர் எதிரியையோ, ஒரு பெரும் பொக்கிஷத்தையோ காவல் செய்யும் கடுமையைப் பார்த்திருந்தால் போதும்; 'தெறு காவல்' என்பதில் புதைந்து கிடக்கும் பயங்கர சித்திரத்தை மனக் கண்ணுக்கு ஒருவாறு இலக்காக்கிக் கொள்ளலாம்.

'தெறு காவல்' என்ற சொற்றொடரால் கம்பன் குறிப்பிடுவது காவலாளிகளையல்ல, காவலையேதான்! அதாவது காவல்–தெய்வம் அல்லது காவலின் அதிதேவதையை.

சீதையைச் சூழ்ந்துள்ள காவலைத் 'தெறுகாவல்' என்று குறிப்பிட்டாலும் போதாது. சீதையைச் சூழ்ந்திருக்கும் காவலாளிகள் 'தெறு காவலு'க்கும் மேலே போனவர்கள். அதாவது, காவல் - தெய்வத்திற்கும் மேலானவர்கள்.

காவல் – தெய்வமே கொஞ்சம் அயர்ந்து விட்ட போதிலும், 'ஜாக்கிரதை' என்று அந்தத் 'தெறு காவலை'யும் தூண்டி உத்ஸாகப் படுத்தக் கூடியவர்களாம் இந்தக் காவலாளிகள்.

எனவே, அனுமன் ஒரு மந்திரத் தொழில் செய்ததாகக் கம்பன் கற்பனை செய்கிறான். 'ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?' என்று ஆண்டாள் திருப்பாவையில் குறிப்பிடுகிறாளே, அந்தத் 'துயில் மந்திரம்.'

'Mass Hypnotism' என்று சொல்லுகிறார்களே, அந்த மாதிரி ஒரு வகைப் பெருந்துயில் மந்திர வித்தையைப் பிரயோகித்துத் திரிஜடை உள்ளிட்ட அரக்கியரை யெல்லாம் ஒரே தூக்கத்தில் ஆழ்த்தி விடுகிறானாம் அனுமன். உபாயம் எப்படி?



3

2. வசீகரமான பிரவேசம்

'இப்போது நமது விவாக முகூர்த்தம் நெருங்கி வருகிறது' என்று காதலன் காதலிக்குச் சொல்லும் வாக்கியத்துடன் ஆரம்பமாகிறது, 'நடுவேனில் இராக்கனவு' என்னும் ஷேக்ஸ்பியர் – நாடகம். சீதையோ, 'இப்போது எனது மரண காலம் நெருங்கி வருகிறது' என்னும் உணர்ச்சியுடன் இருக்கிறாள், அசோக வனத்திலே.

அனுமனோ, 'இதுவே சீதையைக் காண்பதற்கு ஒத்த காலம்' என்று தீர்மானிக்கிறான்.

காண்டற்(கு) ஒத்த
காலமும் ஈதே

என்ற அனுமன் 'தனிமொழி'யுடன் தொடங்குகிறது, ஒப்பற்ற சுந்தர காண்டக் காட்சியொன்று.

முதல் மாறுபாடு

காவலோ 'தெறுகாவல்' (சுடுகின்ற காவல்; அழிக்கின்ற காவல்) மட்டுமல்ல. காவலின் அதிதேவதையாகிய 'தெறுகாவலை'யும் அயர்ந்தால் தூக்கித் தூண்டி விடக் கூடிய காவல்.

இந்தக் காவலாளிகளைத் 'தெறு காவல் தூண்டற்கு ஒத்த சிந்தையினரும் துயில்கில்லார்' என்று சுட்டிக் காட்டுகிறான் கவிஞன்.

அவர்கள் தூங்கினால் சீதையோடு கொஞ்சம் பேசிக் கொள்ளலாமே என்றால், அந்த ஆசாமிகள் தூங்குவது என்பது நடக்கிற காரியமா? ஏற்கெனவே நள்ளிரவில் அரக்கியர் யாவரும் கள்ளுண்டு கருத்தழிந்து மெய்ம்மறந்து கொஞ்சம் உறங்கிப்போய் விழித்துக் கொண்டதாகத் தெரிந்து கொண்டிருக்கிறான் அனுமன், சீதையை முதல் முதல் கண்டபோது.

அசோக வனத்தின் அந்தப் பகுதிக்கு அனுமன் வந்து சேர்ந்தபோது தான் அரக்கியர் திடுக்கென்று துயிலுணர்ந்தெழுந்து சீதையைச் சுற்றிக் கொண்டனர். அத்தகைய ஆசாமிகள், ராவணன் வந்து எச்சரித்துப் போயிருந்தும் இப்போது தாமே கண்ணயர்ந்து உறங்குவது எப்படிச் சாத்தியமாகும்?

சற்றுக் கீழேயுள்ள கிளையில் இறங்கிப் பார்க்கிறான், சீதையைச் சுற்றி ஒரே வட்டமாய் ஒரே விழிப்பாயிருக்கும் அந்தக் காவலை. அந்தப் பயங்கர விழிப்புள்ள சிந்தை தெரிகிறது முகத்திலும் கண்களிலும்.

வேறு எந்த மனமும் இடிந்து விடக் கூடும்; ஆனால் அனுமன் மனத்திற்கும் சோர்வு உண்டோ?

இந்த நெருக்கடியான நிலையில் அனுமனுக்கு நகைச்சுவை வந்து கொஞ்சம் உதவுகிறது. 'மயிலே, மயிலே! இறகு போடு' என்றால் இந்த மயில்களிடம் பலிக்குமா? 'தாய்மார்களே! சீதையோடு நான் சற்றுப் பேச விரும்புகிறேன்; தயவு செய்து எனக்காகக் கொஞ்சம் உறக்கம் போடுங்கள், சகோதரிகளே!' என்று வேண்டிக் கொண்டால் ஏதாவது பலன் ஏற்படுமா?

'என் வேண்டுகோளுக்காகவோ, பிரார்த்தனைக்காகவோ இந்தப் பேர்வழிகள் உறங்கப் போகிறார்களா?' என்று ஏளனமாக ஒருவகை நகைச்சுவையுடன் தனக்குத் தானே சொல்லிக் கொள்கிறான்.

சம், நம்முடைய மந்திரவித்தை ஒன்றைப் பிரயோகித்துக் காரியத்தைப் பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்:

'வேண்டத் துஞ்சார்!'
என்றொரு விஞ்சை
வினைசெய்தான்.

[துஞ்சார் – தூங்கமாட்டார். விஞ்சை வினை – மந்திரத் தொழில்.]

வேண்டுகோள் அல்லது விண்ணப்பம் செய்வதும், பிரார்த்தனை செய்வதும் அரசியலில் மிதவாத முறை என்று கருதப்படுகின்றன. அரசியல்–பாஷையில், அனுமன் 'நேரடியான நடவடிக்கை' எடுத்துக் கொண்டதாகச் சொல்லலாம்.

'ஒரு மந்திரம் போட்டு உங்களை உறங்கி விழச் செய்வேன்' என்றுதான் ஆரம்பிக்கிறான். ஆனால் நேர்ந்ததென்ன?

'ஐயோ, இவர்களைக் கொல்லவா மந்திரம் போட்டேன்? **மாரண மந்திரம்** இல்லையே நான் உச்சரித்தது; துயில் மந்திரம் தானே?' என்று அனுமனே சற்றுக் கலங்குமாறு காரியம் நடைபெற்று விடுகிறது.

'செத்துத்தான் போகிறார்களோ?' என்று அஞ்சும்படி அவர்கள் பிரக்ஞை தவறிப் போகிறார்களாம். அனுமன் அந்தப் **பெருந்துயில் மந்திரத்தை** அவ்வளவு ஒருமை யுள்ளத்துடன், அவ்வளவு கடுமையாகப் பிரயோகித்து விட்டான்:

மாண்டற்(கு) உற்றா —
ராமென எல்லாம்
மயர்வுற்றார்.

[மாண்டற்கு உற்றாராம் என –சாகத் தொடங்கி விட்டார்கள் என்று சொல்லும்படி. மயர்வுற்றார் – மயக்கம் அடைந்தார்கள்.]

அரக்கியர் சோர்வுற்றுத் தூங்கிப் போயினர் என்னும் வால்மீகி கதையைக் கம்பன் எப்படி மாற்றி அமைக்கிறான் பாருங்கள்!

அரக்கியர்களெல்லாரும் அப்படிச் சோர்ந்து உறங்கிக் கிடந்தவர்களாய் அனுமனுக்குப் பிராட்டியுடன் பேச அவகாசம் அளிக்கிறார்களென்றே வைத்துக் கொள்வோம். அப்படியானாலும் அனுமன் சாவகாசமாகப் பேசிக்கொண்டிருக்க இயலுமா? அவர்களில் யாராவது இடையே விழித்துக் கொண்டால் என் செய்வது?

எனவே, அனுமனுடைய மந்திர வித்தை அவசியமாகிறது. 'மாண்டற்கு உற்றாராம்' என்ற நிலையில் அவ்வளவு கடுமையாக இந்தப் 'பெருந்துயில் மந்திரம்' அந்த அடங்காப் பிடாரிகளை அடக்கி வைத்திருக்கிறது என்ற திட நம்பிக்கையிலேதான், சந்திப்பும் சம்பாஷணையும் கணையாழி கொடுத்தலும் சூளாமணி பெறுதலும் எல்லாம் கவலையின்றி நடைபெற வேண்டும். இது ஒரு விசேஷ மாறுபாடு.

இந்த மாற்றத்திற்கு உரிய வித்துக் கருத்தினைக் கம்பன் கண்டதெங்கே? ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவையில்,

ஏமப் பெருந்துயில்
மந்திரப் பட்டாளோ?

என்னும் 'பிரசித்தமான வாக்கியத்திலிருந்து பெற்றிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

இனி நாம் கம்பனின் முழுப்பாட்டையும் பார்க்க வேண்டும்:

'காண்டற்(கு) ஒத்த
காலமும் ஈதே;
தெறுகாவல்
தூண்டற்(கு) ஒத்த
சிந்தையி னாரும்
துயில்கில்லார்;
வேண்டத் துஞ்சார்'
என்றொரு விஞ்சை
வினைசெய்தான்;
மாண்டற்(கு) உற்றா —
ராமென எல்லாம்
மயர்வுற்றார்.

அனுமன் தனிமொழியும் சீதை நிலையும்

இந்தப் பாட்டிலே அனுமனுடைய 'தனிமொழி' ஒரு பாதிக்குக் கொஞ்சம் தான் அதிகமாயிருக்கிறது. இந்தத் 'தனிமொழி'யும் அனுமனின் மந்திரச் செயலும், அதன் பலனும் சீதையின் தனிமொழிக்குத் தோற்றுவாயாகின்றன.

'காண்டற்கு ஒத்த காலமும் ஈதே' என்ற **எக்களிப்பில்** ஆரம்பமாகும் தனிமொழி, 'துயில் கில்லார்' என்ற நினைப்பில் சற்றுத் **தயங்கி ஏங்குகிறது**. 'நம்மிடத்தில் தான் அந்தப் **பெருந்துயில் மந்திரம்** இருக்கிறதே' என்ற ஞாபகம்

வந்ததும், ஒருவகை ஏளனப் புன்னகை யுடன் நகைச் சுவையும் எக்களிப்பும் வந்து விடுகின்றன.

கடைசியாக, வெற்றியுணர்வுடன் துரிதமாய் அனுமன் காரியம் செய்யும் தோரணையில் தனிமொழி முற்றுப் பெறு கின்றது.

கிடைத்த வெற்றியோ அனுமன் எதிர்பார்த்த வெற்றிக்கும் மேலே என்பதாகப் பாட்டின் இறுதி அடி. ஓர் அருமையான கம்ப சித்திரம் இந்த ஒரே பாட்டில்.

அடுத்த படியாக, சீதையின் நிலைமை யைத்தான் காணப்போகிறோம். இப் படி அந்த அரக்கியர்கள் உறங்கிக்கிடக் கும் அதிசயத்தைச் சீதை இதற்கு முன் பார்த்ததில்லை.

திரிஜடை தன் கனவைச் சொல்லிக் கொண்டிருந்தாளே, அப்போது அரக்கி யர் கள்ளுண்டு கருத்தழிந்து மெய்ம் மறந்து கிடந்தார்களே, அந்தச் சமயங் கூட அவர்கள் இப்படிச் செத்தாரைப் போல மயங்கிக் கிடந்ததில்லை.

சீதையின் இந்த நினைப்போடு கூடிய பார்வையைத்தான்,

துஞ்சா தாரும்
துஞ்சுதல் கண்டாள்

[துஞ்சாதாரும் — தூங்காதவர்களும். துஞ்சுதல் கண்டாள் — தூங்குவதைக் கண்டாள்.]

எனக் காட்டுகிறான் கவி ஞன்.

அந்த அரக்கியர்களில் திரிஜடை தவிர வேறு எவ ரையும் இன்னார் இன்னா ரென்று சீதை அறிந்து கொண்டதில்லை. அவர்க ளுக்கெல்லாம் பொதுவாக ஒரே தொகுதிப் பெயர் கொடுத்திருந்தாள், 'தூங் காதவர்கள்' என்று.

தூங்காதவர்கள் தூங்கி விழவும், துயரத்தைப் பொறுக்க முடியவில்லை யாம் சீதையால். அந்த அரக்கிமார்கள் தன்னைச் சுற்றி வட்டமிட்டு உட் கார்ந்து கொண்டு உடம் பெல்லாம் ஒரே கண்ணாய், உள்ளமெல்லாம் ஒரே விழிப்பாய்க் காவல் செய்து கொண்டிருந்த போது, தன் துயரத்தை அதிகமாய் வெளிக் காட் டிக் கொள்வதற்கும் சீதைக்குப் பயம்தான். உணர்ச்சி வெள்ளத்திற்



கும் அணை போட்டிருந்தது பெரும் பயம். இப்போது அந்த அணை உடைந்து போகிறது.

ஒரே விழிப்பில் இருந்தவர்கள் ஒரே தூக்கத்தில் விழுந்து கிடக்கும் இந்தக் காணாத காட்சி அணையை இடித்து விடவே, அந்தத் துயர வெள்ளத்தின் தாக்குதலைத் தாங்க முடியவில்லையாம்.

இலங்கைத் தீவை நாலு புறமும் சுற்றிக் கிடக்கும் கடல்வெள்ளம் அவ்வளவும் இவள் துயரவெள்ளம்தானே! எப்படித் தப்ப முடியும் இந்த இடத்திலிருந்து?

தீவாந்தர சிட்சை விதிப்பதும், அந்தமான் தீவுக்குக் கைதிகளை அனுப்புவதும், 'ஐயோ, தண்ணி மேல் ஏற்றி விடுகிறார்களே' என்ற பீதியை எப்படி உண்டாக்கி விட்டது!

நாலு பக்கமும் கடலலைகள் அலற நெஞ்சும் அலறுகிறது, — தப்பும் வழி தென்படவில்லையே என்று. துயர் ஆற்றாத நிலையில் கண்ணுக்கும் தப்ப வழி தெரியவில்லையாம்; அகக் கண்ணுக்கும் கூடத் தப்பிப் பிழைக்கும் வழி தெரியவில்லையாம்:

நெஞ்சால் ஒன்றும்
உய்வழி காணாள்.

[உய் வழி — தப்பிப் பிழைக்கும் வழி.]

அப்படியே உள்ளமும், உடம்பும் கூடக் கரைந்து போவதாகத் தோன்றுகிறது சீதைக்கு — 'நெகுகின்றாள்.'

எத்தனையோ நாளாக அஞ்சி அஞ்சி அழிந்து கொண்டுதானிருக்கிறாள். ஆம், செத்துக் கொண்டுதா னிருக்கிறாள்; எனினும் செத்துப் போய் விடவில்லையாம். என்ன ஆச்சரியம்!

ராமனிடமுள்ள அன்புதான்—மேலும் மேலும் பெருகிக் கொண்டிருக்கும் அந்த இறவா அன்டதான்—உள்ளுக்குள்ளே அவ்வளவு நம்பிக்கையைத் தூண்டி உயிர்த் தீயை அணையவிடாமல் பாதுகாத்து வருகிறது.

செத்துச் செத்துப் போகிறவள்தான்; ஆனால் அமிர்தம் சாப்பிட்டால் சாவதெப்படி?

ராமாமிர்தம் என்ற அன்பின் மகிமையால் 'செத்தவள் பிழைத்தாள்' என்று சொல்லும்படியாகத் தானே பிழைத்துக் கொண்டிருக்கிறாளாம்.

இப்போது முழுப் பாட்டையும் பார்ப்போம். கண்ணாடியில் காண்பதுபோலச் சீதையின் மன நிலையைக் காண்போம்:

துஞ்சா தாரும்
துஞ்சுதல் கண்டாள்,
துயராற்றாள்;

நெஞ்சால் ஒன்றும்
உய்வழி காணாள்,
நெகுகின்றாள்;

அஞ்சா நின்றாள்,
பன்னெடு நாளும்
அழிவுற்றாள்,

எஞ்சா அன்பால்,
இன்னப கர்ந்(து)ஆங்(கு)
இடருற்றாள்.

[ஆற்றாள் — பொறுக்க மாட்டாதவளாய். உய் வழி — பிழைத்துப் போகும் வழி. நெகுகின்றாள் — கரைகின்றாள். அஞ்சா நின்றாள் — அஞ்சுகின்றவளாய். எஞ்சா அன்பு—அற்று அழியாத அன்பு; குறையாத, முழுமையான, அன்பு; இன்ன பகர்ந்து — இவ்வார்த்தைகளைச் சொல்லி. ஆங்கு — அப்பொழுது. இடர் உற்றாள் — துன்பத்தில் உழல்பவள் ஆனாள்.]

இவ்வளவு வசிகரமான பீடிகையுடன் வரப்போகிறது சீதையின் தனிமையுரை. 'ஹாம்லெட் தனிமையுரை' என்ற ஷேக்ஸ்பியர் நாடகக் காட்சி மாதிரி.

உலக இலக்கியத்திலேயே பிரசித்தி பெற்றிருக்கிறது ஹாம்லெட் தனிமையுரை. சீதையின் தனிமையுரையும் 'கம்ப நாடகம்' என்று சொல்லப்படும் கம்ப சித்திரக் காட்சிகளிலே பிரசித்தமானவைகளில் ஒன்று.

சீதையின் தனிமையுரை ஹாம்லெட் தனிமையுரை போல் இலக்கிய உலகப் பிரசித்தி பெறவில்லையே என்றால், கம்பன் தமிழனாய்ப் பிறந்து தமிழிலே பாடிய குறைதான் காரணம்!

தமிழின் சிகர மேதையைச் சரியாகத் தமிழர்களே தெரிந்து கொள்ள வில்லை. இன்றளவும் தக்க முறையில் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?

தக்க தமிழறிஞன் — ஆங்கிலத்திலும் வல்லவன் — இங்கிலீஷில் அமைக்கும் போதுதான் கம்ப சித்திரங்கள் உலகப் பெருஞ் செல்வமாகிய இலக்கியத்தில் இடம் பெற்று அந்த இலக்கியத்திற்கே ஒரு தனியழகு தரக்கூடும். அந்தப் பெருந் தமிழறிஞன், யோகி அரவிந்தரின் பேரறிவும் கவி ரவீந்திரரின் சக்தியும் பெற்றிருக்க வேண்டும்.



கணையாழியும் சூளாமணியும்

பி.ஸ்ரீ

5

3. மங்கிய விளக்கு

கோடை வெயில் தகிக்கத் தவிக்கின்றன பயிர்பச்சைகள். ஆடுமாடுகளும் தவிக்கின்றன தாபத்தாலும் தாகத்தாலும். குடியானவர்களும் துடிக்கின்றனர். அப்போது கருமேகம் விண்ணிலே தோன்றுமானல் அதன் அழகை, அந்தக் குளிர்ச்சியை, அந்த இன்பத்தை, அந்த நம்பிக்கைக் குறியை, அந்தச் செழிப்பின் சின்னத்தை எப்படி மக்கள் அனுபவிப்பார்கள்!

உயிர் தரும் பொருள்கள்

திருக்குற்றுலத்திலே 'சாரல்' கட்டிக் கருமேகங்கள் ஒருசேரத் திரண்டு கருங்கடலே மலைக்கு மேல் வந்து கிடப்பது போலத் தோற்றம் அளிக்கிறது. அந்தப் பருவ மேகங்களைக் கண்டதும் உள்ளம் துள்ளுகிறது. மலையை நீராட்ட வந்தது போலக் கிடக்கும் கருமேகம், நம் உள்ளத்திலும் இன்ப மாரி பொழிகின்றது.

கருமேகம் போல் கருங்கடலும் உயிர் தரும் பொருள் தான். கடலின்றி நிலத்திலே வாழ்வுண்டா? மேகம் ஏது, மழை ஏது? நிலமா மகள் நீலக் கடலாடை யுடுத்துத் தான் பச்சை போர்த்து மேனி செழித்துச் செல்வம் கொழிக்கிருள்.

கருமேகமும் கருநீலக்கடலும் போல் இயற்கைச் சோலையாகிய காடும் உலகத்திற்கு உயிர்நிலையாக இருக்கிறது. 'பார்பூத்த பச்சைப்பசுங்கொடி' என்கிருேம். இயற்கையன்னையையும் உமா தேவியையும். நோயுற்று மெலிந்தவர்கள் குற்றுலத்துச் சாரல் மேகங்களையும் மழையையும் அனுபவித்து ஆரோக்கியப் பேறு பெறலாம்; உள்ளத்திற்கும் ஆரோக்கியம் தேடிக்கொள்ளலாம். உணர்வு தழைக்க உயிர் தழைக்கப் புதிய பொலிவு பெற்று வாழலாம்.

கடலும் உயிர்தர வல்லது. 'ஒருவர் ஆவி தீரினும் உதவற்கு ஒத்த'து கடற்காற்று என்று கவிஞன் ஏற்கெனவே வருணித்திருக்கிருன். 'அந்தோ, உயிர் போச்சே!' என்ருல், 'இந்தா தந்தேன் அந்த உயிரை!' என்று வந்து மூச்சு விடுகிறதாம் கடற்காற்று.

சிங்காரப் பூங்காவனங்களை ஒரு நகரத்தின் மூச்சுப் பைகள் என்பர். சோலைகளும் காடுகளும் நிலமகளின் மூச்சுப் பை. நமது நாட்டிலே காடுகள் ஞான வாழ்க்கைக்கும் மூச்சுப் பையாக அமைந்தன என்பதற்கு அருமறையும் மறை முடியாகிய உபநிஷதமும் சான்று.

கருமேகம், நீல நெடுங் கடல், பச்சைப் பசுஞ்சோலை ஆகிய இம் மூன்றும் உயிர் தரும் பொருள்கள். இம் முப்பொருளும் சேர்ந்து 'ராமன்' என்னும் முழுச் செல்வமாகி விட்டனவா? நிறத்தில் மட்டுமா?—குணத்திலும் தான்.

உலகத்திற்கெல்லாம் உயிர் தரும் பொருளாக இருக்கும் ராமன், கதியற்றுத் தனித்திருக்கும் மனைவிக்கு மட்டும் உயிரைத் தரமாட்டாளு?

சித்தாகாசத்திலே தோன்றிய கருமேகம் கருணை மழை பெய்யப் போகிறதா? அல்லது நாட்டை ஏமாற்றிக் காட்டுக்கு விரைந்தது போல் இந்த நெஞ்சையும் வஞ்சித்துப் போய்விடுமா?

அழகிலும் நீல நெடுங் கடல்; அழகிய குணதிசயத்திலும் வரம்பின்றி விரிந்து கிடக்கும் தனிப் பெருங் கடல்தான். கடலும் பொய்த்து வறண்டு போகுமா?

இச்சைக்கு இனிய பச்சைப் பசுஞ் சோலை ராமனின் மேனி யழகும் உள்ளழகும்: சோலை 'ஸஹாரா' ஆகி விட்டதா ?

இத் தனிமையுரை கவிதை என்ற மந்திரவித்தையால் நம் செவியில் வந்து விழுகிறது :

கருமே கம், நெடுங் —
கடல்,கா அனையான்,
தருமே தமியேன்
எனதா ருயிர்தான் ?
உரும்ஏ(று) உமிழ்வெஞ் —
சிலைநாண் ஒலிதான்
வருமே ? — உரையாய்,
வலியார் வலியே !'

[கா – சோலை. அனையான் — ஒத்தவன். தருமே — தருவானா. தமியேன் எனது — கதியற்றுத் தனியா யிருக்கும் என்னுடைய. உரும் ஏறு — பெரிய இடி முழக்கம். வெஞ்சிலை — கொடிய வில் ; விரும்பப்படும் வில். வருமே — இங்கு வருமா. உரையாய் — உரைப்பாயாக. வலியார் வலியே — வீரர்களுக்கு வலிமை கொடுக்கும் வீர தேவதையே.]

கையிலிருக்கும் கோதண்டத்தின் நினைவும் வருகிறது. சித்தாகாசத்திலே தான் பார்க்கிறாள் வில்லாளனையும் வில்லையும் — விண்ணிலே மேகத்தையும் வான வில்லையும் பார்ப்பது போலே.

அந்த வில்லை அனுயாசமாக விரலால் சுண்டி நாண் தெறித்ததும், ஆஹா, இடி முழக்கமே உண்டாகும்! அம் முழக்கம் கேட்டுத் துஷ்ட மிருகங்களும் துஷ்ட அரக்கர்களும் என்ன ஓட்டம் ஓடினார்கள் !

இப்போது சீதை அந்த விஜய கோதண்டத்தின் டங்காரத்தைக்கேட்க விரும்புகிறாள். ஏன், அலந்து போயிருக்கிறாள். எதிரிகளுக்குப் பயங்கரமாயிருந்த இடி சீதைக்கு இனிமையாக மழைக்குறி காட்டுகிறது !

துயரத்தின் வேகம்

'இந்த இலங்கையிலும் அந்த ஓசை பிறக்குமா ?' என்று சற்றுப் பல்லைக் கடித்துக் கொண்டு கேட்கிறாள். யாரை? யாரே இவள் கேள்விக்குப் பதில் சொல்ல முடியும் ?

' திரிஜடையும் வசிய நித்திரைக்கு உட்பட்டுக் கிடக்கிறாளே ; வேறு யாரோடு



தான் பேச முடியும் ? 'நீயே பதில் சொல்லு' என்று வேண்டுகிறாளே, யாரை ? கவனியுங்கள் : 'வீரர்களின் வீரமே !' என்று அழைக்கிறாளல்லவா ?

ஆம் ; வீரம்தானே வீர பத்தினியின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டும் ? அந்த வீரம்தான் இப்போது கண்முன் வந்து நிற்கிறது !

ராம சொரூபம் மறைந்து வீர உலகத்திற்கெல்லாம் அதி தேவதையே இப்போது கண்முன் வந்து நிற்பதாகத் தோன்றுகிறது சீதைக்கு.

'அந்த டங்காரம் இந்த ராட்சஸ பூமிக்கும் வருமா? வாய்விட்டுச் சொல்லு, வீர சக்தியே !' என்கிறாள்.

'உணர்ச்சி-வேகம் ஒரு அற்புதமான நாடக இயலில் பேசுகிறது' என்றும், 'துயரம் அளவுக்கு மிஞ்சிப் போய்விடவும் மனமும் பேச்சும் அசாதாரண முறையில் வெளிப்படுகின்றன' என்றும் ரஸிகமணி இங்கு விமர்சனம் செய்திருப்பது வெகு ரஸமா யிருக்கிறது.

இத்தகைய துக்க வெறியில் பைத்தியம் பிடித்தாலும் பாதகமில்லை யென்று தோன்றுகிறது. உயிரைக் காட்டிலும் அறிவை விரும்பிக் காக்க வேண்டும் என்ற ஆசை பிராணி வர்க்கத்தின் சிகரமா யிருக்கும் மனித ஜாதிக்கு உண்டு; அப்படி யிருந்தும் சீதைக்குத் தோன்றுகிறது முதன் முதலாக, 'மரணம்தான் வரவில்லை யென்றால் 'பைத்தியமாவது வரலாகாதா?' என்று. அப்



போது இந்தப் பிராண வேதனையை உணராமலாவது இருக்கலாமே!

அப்போது வீர தேவதையோடு உரையாடியவள் இப்போது தன்னுடைய அறிவுடனும் உயிருடனும் கூட்முக முகமாய் உரையாடத் தொடங்கி விடுகிறாள்:

'ஏன் இப்படிப் பெருநாள் என்னோடு உழன்று கொண்டிருக்கிறீர்கள்?' என்று கேள்வி கேட்டவள், திடீரென்று அந்த அறிவுக்கும் உயிருக்கும் தானே வக்காலத்து வாங்கிக் கொண்டு பரிந்து பேசுகிறாள்.

'சரிதான்; உங்களுக்கும் என்னைப்போல் ஆசைப் பைத்தியம் தான்! அவனைப் பார்க்கும் வரையிலும் போகமாட்டோம், போக முடியாது என்று பிடிவாதம் பிடிக்கிறீர்கள் போலும்' என்கிறாள்.

ராமனைப் பார்த்துவிட்டு இருக்க வேண்டுமென்று கூட அவை ஆசைப்பட வில்லையாம். 'நேபிள்ஸ் நகரத்தைப் பார்த்து விட்டுச் செத்துப் போ!' என்று ஓர் ஆங்கில வாக்கியம் உண்டு. அந்த அழகுகளைக் கண்ட கண்களுக்கு மற்றவையெல்லாம் கோரங்களாகவே தோன்றுமாம். அந்த நிலையில் இருக்கின்றன சீதையின் உணர்வும் உயிரும்!

தன் உணர்வும் உயிரும் போகாமல் இருப்பது சரிதான் என்பது போல் வாதாடி வழக்குரைத்த சீதை, 'நீங்கள் போக வில்லையென்றால் பழி ஏற்படுமே —என்னைப் போல் உங்களுக்கும்! ஐயோ, ஆபரணமாக அல்லவா நான் பழியை அணிந்து கொண்டிருக்கிறேன்?' என்று எதிர் வழக்காடவும் செய்கிறாள்.

இப்படித் துயர வெறியிலே, தன்னிடமிருந்து உணர்வையும் உயிரையும் பிரித்துக் கொண்டு வந்து தனக்கு முன்னே நிறுத்தி 'நீதி மன்றம்' நடத்திப் பார்க்கும் சீதையைப் பாருங்கள்:

பேணும் உணர்வே!
உயிரே! பெருநாள்
நாணின்(று) உழல்வீர்;
தனி நாயகனைக்
காணும் துணையும்
கழிவீ ரலிர்! நான்
பூணும் பழியோடு
பொருந் துவதோ?

[பேணும் — விரும்பும். பெரு நாள் — பல நாளாக. நாண் இன்று — நாணம் இன்றி. உழல்வீர் — என்னோடு அலைகிறீர்கள். தனி நாயகனை — ஒப்பற்ற தலைவனாகிய ராமனை. காணும் துணையும் — காணுமளவும். கழிவீரலிர் — கழிந்து போக மாட்டீர் போலும். பூணும் — ஆபரணமாகப் பூண்டு கொண்டிருக்கும்.]

பழியோடு காத்துக் கொண்டிருந்தாலும் ஆசைதான் நிறைவேறப் போகிறதா? 'அவ்வளவு இரக்கமும் உண்டா ராமனுக்கு?' என்று கூட எண்ண மிடுகிறாள்.

இறந்து போன மாமனாரின் நினைவு வருகிறது. பெருங் கிழவரான மாமா வயது காரணமாகத் தான் இறந்தாரா? — ஏதோ நோய் வந்து பழி ஏற்றதா?

அவருடைய ஆட்சிக்கு முடிவே கிடையாது என்றல்லவா மக்கள் நம்பி யிருந்தனர்? 'முடியா முடி மன்னன்' என்பதல்லவா மக்களின் அன்பளிப்பாகிய அருமைப் பெருமைப் பட்டம்? அந்த முடியா முடி மன்னனை முடித்த பெருமை நம் தனி நாயகனைச் சேர்ந்தது தானே! — என்று கதறுகிறது நெஞ்சு.

ஐயோ, என்ன கல் நெஞ்சு! கிழத் தந்தையை மட்டுமா முடித்தான்? துயர வெள்ளம் மக்களை மூழ்கடிக்க வில்லையா? நாயகன் திரும்பிப் பார்த்தானா? அப்படியே வனத்திற்கு வந்து விட வில்லையா?

"அப்பேர்ப்பட்ட கொடியவர் என் துன்பத்தைப் பெரிதாக மதித்து இவ்வளவு தூரம் வருவாரா?' என்று அலறுகிறது சீதை நெஞ்சு.

'வருவார், வருவார்' என்ற நம்பிக்கை யல்லவா உள்ளுக்குள்ளே கிடந்து உணர்வையும் உயிரையும் இதுவரை பாதுகாத்து வந்திருக்கிறது? இப்போது சீதை சொல்லுகிறாள்: 'உணர்வே! உயிரே! கொடியார் வருவாரென்று குலாவிக் கொண்டிருக்கிறீர்களே; நம்பிக்கைக்காவது மகிழ்ச்சிக்காவது காரணமே இல்லை!' யென்று.

இந்த நிஷ்டூர வார்த்தையை மட்டுமா கேட்கிறோம் இந்தப் பாட்டிலே? எய்த்துப்போன உள்ளத்தையும் அலுத்துக் குலைந்து கொண்டிருக்கும் உயிரையும் பார்க்கிறோம். தேம்பிப் பெருமூச்சு வருவதையும் உணர்கிறோம்:

'முடியா முடிமன் —
னன்முடிந் திடவும்,
படிஏ ழும்நெடுந்
துயர்பா விடவும்
மடியா நெறிவந் —
துவனம் புகுதும்
கொடியார் வருமென் —
றுகுலா வுவதோ?

[முடி – கிரீடம். படி ஏழும் – ஏழு லோகங்களிலும். பாவிடவும் - பரவவும். மடியா நெறி – முடியாத வழி; திரும்பாத வழி. கொடியார் – கொடியவர். குலாவுதல் – மகிழ்தல்.]

நாயகன்மேல் அவநம்பிக்கை கொள்ளும் சீதை சத்தியத்தின் மீதுள்ள நம்பிக்கையையும் கொஞ்சங் கொஞ்சமாய்த் தளர விட்டுக் கொண்டிருக்கிறாளோ என்று கூட அஞ்சுகிறோம்.

சத்தியப் பெருநெறி இங்கே 'மடியா நெறி' — (திரும்பாத நெறி). 'தில்லை வெளியிலே கலந்து விட்டால் அவர் திரும்பியும் வருவாரோ?' என்கிறார் நந்தனார் (சரித்திரக் கீர்த்தனையிலே). ரயிலேறிச் சிதம்பரத்திற்குப் போய் வருகிற காரியமா அது? நந்தனார் நாடியது ஞான சிதம்பரம், லட்சிய சிதம்பரம், அவர் சென்ற சிதம்பர நெறி 'மடியா நெறி' தான்.

அத்தகைய லட்சியப் பெருநெறியிலே. சத்தியப் பெருவழியிலே ராமன் செல்வதாகத்தான் சீதையுள்ளம் நம்புகிறது என்பதில் ஐயமில்லை. என்றாலும், அந்த 'மடியா நெறி' எவ்வளவு கரடு முரடான முள்ளுப் பாதையில் இழுத்துக் கொணர்ந்து வனத்திற்குள்ளேயே புகுத்தி விட்டதல்லவா? — என்று உதிரம் கொட்டுகிறது நெஞ்சு.

நம்பிக்கை—விளக்கு மங்கித்தான் எரிகிறது. நெய்யும் தூண்டுகோலும் இன்னும் கிடைத்துவிட வில்லையே!

*　*　*

உயிருண்டு என்றால் துன்பமும் உண்டு என்ற ஒரு விஷயம் தான் இப்போது உண்மையாகத் தோன்றுகிறது. 'என் உயிரோடு தான் துயரும் போகும். பழியும் போகும்; அப்போது புகழும் ஏற்படும்' என்று தீர்மானிக்கிறாள்.

'புருஷன் வரப் போவதில்லை; ஆகையால் சாக வேண்டும்' — இது தனிமையுரையின் முதலாவது படி.



4. 'மனம் புகுந்து மனை புகுந்தேன்!'

ஒரே இடத்தில் உட்கார்ந்துகொண்டு, பெருமூச்சு விட்டுக்கொண்டு, தன்னோடு தானே உரையாடிக்கொண்டு மனம் அழிந்து புலம்புகின்ற சீதையையும், 'உயிருண்டானால் இடருண்டு' என்ற இவள் சித்தாந்தத்தையும் கவிஞன் தெளிவாகக் காட்டுகிறான்.

காட்டும் பொழுதே, மெலிந்து துடிக்கும் அந்த ஸ்தூல உருவத்தையும் பொருள் புதைந்த ஒரு விவரக் குறிப்பால் (significant detail) நம் மனக் கண்முன் காட்டி விடுகிறான் :

மின்துன் னுமருங் —
குல்விளங்(கு) இழையாள்.

[மின் துன்னு மருங்குல் — மின்னலைப் போன்ற இடை. விளங்கு இழையாள் — பிரகாசிக்கிற ஆபரணங்களையுடைய சீதை.]

மேனியில் ஆபரணம் ஒன்றும் இல்லாமலிருந்தும், 'விளங்கு இழையாள்' என்று குறிப்பிடுவது ஒருவகை இதிகாச மரபு. ஆபரணங்களுக்கும் ஆபரணமாகிய திருமேனி, நகர் நீங்குமுன் அணிந்திருந்த ஆபரணங்களை நினைப்பூட்டுகிறது ; எனினும் ஆபரணம் இல்லாத நிலையிலும் அவ்வளவு அழகையும் அதிநுணுக்கமாய்க் காட்டுகிறதாம்.

கவிச் சித்திரம் ஆகாச சித்திரமாகி விடாமல் மனோபாவத்தில் நிலைபெறுவதற்கு, 'மின் துன்னு மருங்குல் விளங்கிழையாள்' போன்ற சொற்றொடர்களைக் கம்பன் உபயோகிப்பது வழக்கம்.

இப்போது இம் முழுப் பாட்டிலே சீதையை நோக்குவோம் :

என்றென்(று) உயிர்விம் —
மி இருந்(து) அழிவாள்,
மின்துன் னுமருங்—
குல்விளங்(கு) இழையாள்,
'ஒன்றென் உயிருண் -
டெனின், உண்(டு) இடர்; யான்
பொன்றும் பொழுதே
புகழ்பூ ணும்' என.

[என்று என்று – எனப் பலவாறாகத் தனக்குள்ளே சொல்லிக் கொண்டு. உயிர் விம்மி – பெருமூச்சு விட்டு. இருந்து அழிவாள் – உயிரோடு இருந்துகொண்டே அழிகின்றவள்போல் மனம் வருந்துபவளாய் ஒன்று என் உயிர் உண்டு எனின், உண்டு இடர்–என் உயிர் ஒன்று உடம்பில் உண்டு என்றால் கூடவே துன்பமும் உண்டு. யான் பொன்றும் பொழுதே – நான் இறக்கும் பொழுதுதான். புகழ் பூணும் – புகழை ஆபரணமாகப் பூண்டுகொள்ள முடியும். என – என்று எண்ணி.]

மீட்சிக் கனவுகள்

இப்பாட்டுடன் தான் தனிமையுரையின் முதற்படி பூர்த்தியாகிறது. அடுத்தபடியாக, 'அவர் வந்தாலும் என்னை அங்கீகரிக்கப் போகிறாரா?' என்ற ஐயப்பாடு ஏற்படுகிறது :

'பொறைஇருந்(து) ஆற்றிஎன்
உயிரும் போற்றினேன்,
அறையிருங் கழலவற்
காணும் ஆசையால் ;
நிறையிரும் பல்பகல்
நிருதர் நீள்நகர்ச்
சிறையிருந் தேனை, அப்
புனிதன் தீண்டுமோ ?

[பொறை – பொறுத்தல். அறை – ஒலிக்கிற. இருங்கழலவன்; காணும் ஆசை – பெரிய வீரக் கழலை அணிந்த ராமனைக் காணும் விருப்பம். நிறை இரும்பல்பகல் – நிறைந்த மிகப் பல நாளாக. நிருதர் – அரக்கர். நீள் நகர் – பெரிய பட்டணம்.]
என்று கூறுவதைக் கேளுங்கள்.

ராட்சஸ் பட்டணத்தில் ஒவ்வொரு நிமிஷமும் யுகமாகக் கழியும்படி இத்தனை நாளாகத் தன்னுயிரை எப்படியோ காப்பாற்றி வைத்திருக்கிறாள்! இந்த அற்புதத்திற்குக் காரணம் அவனைக் காணும் ஆசை தானே?

அந்த வீரமூர்த்தி இங்கே எப்படியாவது வரக்கூடும். வந்து விட்டாலோ அரக்கர்களை அடியோடு முடித்துத் தன்னைச் சிறையிலிருந்து விடுவிக்கவும் கூடும்.



'ஆனால் அவன் புனிதன் (பரிசுத்தமானவன்): துஷ்ட ராட்சஸர்களுக்கிடையே சிறையிருந்த என்னை ஏற்றுக்கொள்ளப் போகிறானே?' என்ற ஐயப்பாடும் ஏற்படுகிறது.

இப்படியெல்லாம் ஏங்கிக் கொண்டிருக்கும் சீதை யுள்ளத்திலே எதிர்காலத்தின் சாயை — யுத்தகாண்டம் மீட்சிப் படலத்திலே ராமன் சீதையை அங்கிகரிக்க மறுக்கும் அந்த நிகழ்ச்சியின் சாயை — ஒரு முற்குறியாக வந்து விழுவதுபோலத் தோன்றுகிறது.

இதைக் காட்டிலும் ஒரு கொடிய சந்தேகத்தையும் மனோபாவம் கற்பித்துக் காட்டுகிறது:

அற்புதன், அரக்கர்தம்
வருக்கம் ஆசற
விற்பணி கொண்(டு) அருஞ்
சிறையின் மீட்டநாள்,
'இற்புகத் தக்கலை'
என்னின், யானுடைக்
கற்பினை எப்பரி(சு)
இழைத்துக் காட்டுகேன்?

[அற்புதன் — அற்புதமான வீரமுள்ளவன். வருக்கம் — கூட்டம். ஆசற — அடியோடு முடிய. விற்பணி — வில்லின் தொழில். அருஞ்சிறை — மீட்பதற்கு அருமையான சிறை. இல் — வீடு. தக்கலை — தகுதியுடையவள் இல்லை. என்னின் — என்று சொல்லி விட்டால். யான் உடைக்கற்பு — நான் உடைமையாகக் கொண்டுள்ள கற்பு. எப்பரிசு — எவ்விதம். இழைத்து (இங்கே) — நிரூபித்து.]

ராமன் வருகிறான்; விடுவிக்கிறான்; அயோத்திக்கே அழைத்துப் போகிறான். ஆனால் அரண்மனைக்குள்ளே அழைத்துக் கொண்டு போகாமல், 'ஸீதே, நீ என்னுடன் வீட்டுக்குள்ளே வரத் தகுதியுடையவளில்லை; வெளியே ஒரு மாளிகையில் தங்கலாமே!' என்று சொல்லி விட்டால் என் செய்வது?

'அந் நிலையில் என் கற்பு நிலையை எந்தச் சாட்சி கொண்டு எப்படி நிரூபித்துக் காட்டுவேன்?' என்று தன்னைத் தானே கேட்டுக் கொள்கிறாள்.

'யானுடைக் கற்பு' என்று கூறுவது கவனிக்கத் தக்கது. வேறு உடைமையென்பது இல்லாமல் கற்பையே முழு உடைமையாகக் கொண்டிருக்கிறாள் என்பது குறிப்பு.

கணவன் தான் இருக்குமிடம் வந்து தன்னை ஊருக்கே அழைத்துக் கொண்டு போன போதிலும், வீட்டிலேயே வைத்துக் கொண்ட போதிலும், அங்கே தான் எப்படிப்பட்ட வாழ்க்கை கிடைக்கப் போகிறது?


சீதை யுள்ளம் ஜுர வேகத்தில் வேலை செய்கிறது:

வருந்தலில் மானமா
அனைய மாட்சியர்
பெருந்தவ மடந்தையர்
முன்பு பேதையேன்,
'கருந்தனி முகிலினைப்
பிரிந்து கள்வர்ஊர்
இருந்தவள் இவள்!' என
ஏச நிற்பெனோ!

[வருந்தலில் – ஒரு வருத்தம் அல்லது அவமானம் நேருமாயின். மானமா அனைய - மானத்தையுடைய கவரி மானைப்போன்ற. மாட்சியர் – உயிரை விடுகின்ற மாட்சியுடையவர்களாகிய.

பெருந்தவ மடந்தையர் — கற்பு என்னும் பெருந்தவத்தையுடைய பெண்கள். பேதையேன் — அறிவில்லாத நான். கருந்தனி முகிலினை — ஒப்பற்ற நீலமேகம் போன்ற ராமனை.]

ஊர் வம்பளப்பதை எப்படிப் பிரமாதப்படுத்துகிறது இந்தப் பெண்மை யுள்ளம்! பதினாலு ஆண்டுகள் ஊரில் இல்லாத தன்னை அப் பெண்கள் ஒருவருக்கொருவர் சுட்டிக் காட்டி, 'இவள் யார் தெரியுமா?' என்று தெரிவிக்கத் தொடங்குவார்களாம்.



'கணவனைப் பிரிந்து கள்ள அரக்கர்களின் ஊரில் போயிருந்தவள்' என்று பேசுவார்களாம். 'அத்தகைய ஏச்சுக்கும் பேச்சுக்கும் இலக்காக நிற்பேனோ?' என்று



அலறுகிறது சீதை நெஞ்சு. 'அவள்' என்று கூடச் சிறிது தூரத்திலிருந்து சுட்டிக் காட்டாமல், 'இவள்' என்று நெருங்கி வந்தும் ஏசுவார்களே! — என்கிறது சீதையின் மனோபாவம்.

அப்படி வம்பளப்பவர்களைப் 'பெருந்தவ மடந்தையர்' — அதாவது, கற்பு என்னும் பெருந்தவத்தை யுடையவர் — என்று குறிப்பிடுகிறது சீதையின் பெருந்தகைமை.

இனி அந்தப் பெருந்தவக் கற்பின் மாட்சியையும் லட்சியத்தையும் நினைத்துப் பார்க்கிறாள்.

கொடிய தற்சோதனை

'நினைப்பும் செயல் தான்!' என்ற யோக நூலுண்மையை ஆதாரமாகக் கொண்டு, கற்பிற் சிறந்த பெண்கள் பரபுருஷர்களை மனசாலும் நினைக்கமாட்டார்கள் என்று சொல்வதுண்டல்லவா? தமிழர்கள் இதைக் காட்டிலும் உயர்ந்த லட்சியம் ஒன்றைக் கற்பித்தார்கள்.

பரபுருஷர்கள் மனசிலும் கற்புடைய பெண்கள் பிரவேசிக்க மாட்டார்கள்! — என்பதுதான் இக் கொள்கை. நடையுடை பாவனைகள் கூடப் பரபுருஷர் உள்ளத்தில் தவறான எண்ணங்களைத் தூண்டாமல் இருக்க வேண்டும் என்பது இக் கொள்கையின் அடிப்படையாக இருக்கலாம். **கற்புடைப் பெண்டிர் பிறர் மனம் புகார்** என்பதாக இக் கொள்கை வெளியிடப் பெறுகின்றது.

சீதை இந்த லட்சியத்தின் முன் எவ்வளவு கடுமையாகத் தன்னைச் சோதித்துப் பார்க்கிறாள்:

உன்னினர் பிறர்என
உணர்ந்தும் உய்ந்(து), அவர்
சொன்னன சொன்னன
செவியில் தூங்கவும்
மன்னுயிர் காத்(து), இருங்
காலம் வைகினேன் !
என்னின் வே(று) அரக்கியர்
யாண்டை யார்கொலோ ?

[உன்னினர் – நினைத்தார்கள். உய்ந்து – பிழைத்திருந்து. தூங்கவும்–தொங்கி ஆடிக் கொண்டிருக்கவும். மன்னுயிர் காத்து – உயிரை விடாமல் நிலையாகக் காத்து, இருங்காலம் – பல காலம். யாண்டு – எவ்விடம்.]

பிறர் தன்னை நினைத்தது மட்டுமா, விரும்பியது மட்டுமா? அவர்கள் சொன்ன சொற்களும் செவியில் தொங்கிக் கொண்டிருக்கின்றனவாம்.

காதணிகள் போல இரண்டு காதிலும் அவை தொங்குகின்றன என்பதைத் தான்,

சொன்னன சொன்னன
செவியில் தூங்கவும்

என்பது எவ்வளவு விளக்கமாக வெளியிடுகிறது !

எனினும் அந்தச் சொற்கள் செவிக்குள்ளே புகுந்து விடவில்லை யென்பது குறிப்பு. வார்த்தைக்கு வார்த்தை சீதை பதில் சொல்வது போல் வால்மீகர் சொல்லி யிருக்கக் கம்ப சித்திரம் வேறு விதமாக அமைக்கப்பட்டது என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்.

இத்தகைய சீதை நெஞ்சு துடிக்கிறது, 'இதோ இருக்கும் இவர்களா ராட்சஸிகள்? இன்னும் உயிரைக் காத்து வைத்துக் கொண்டிருக்கும் நானல்லவா கொடிய ராட்சஸி ?' என்று :

என்னின்வே(று) அரக்கியர்
யாண்டை யார்கொலோ ?

ராவணன் மனைக்குத் தானாக வந்து சேர்ந்ததாகவும், அதற்கு வசதியாகவே கணவனை மாய மானுக்குப் பின்னே அனுப்பி விட்டு, 'அவருக்குப் பின்னே நீயும் போய் விடு' என்று மைத்துனப் பிள்ளையை வைது துரத்தி விட்டதாகவும் எண்ணமிடுகிறாள் சீதை.

மாய மானைக் கண்டு கொள்ளாத பிசகும், லட்சுமணனைக் கோபித்துக் கொண்ட குற்றமும் எவ்வளவு மகத்தான குற்றங்களாகக் காண்கின்றன, இப்போது மனக் கண்ணிலே :

வஞ்சனை மானின்பின்
மன்னைப் போக்கிஎன்
மஞ்சனை வைது, 'பின்
வழிக்கொள் வாய்!' என,
நஞ்சனை யான்அகம்
புகுந்த நங்கையான்
உய்ஞ்சனென் இருத்தலும்
உலகம் கொள்ளுமோ ?

[மன்னை – (இங்கே) நாயகனை. மஞ்சன் – மைத்துனப் பிள்ளை. நஞ்சனை யான் – நஞ்சு போன்ற ராவணன். உய்ஞ்சனென் இருத்தலும் – பிழைத்து இருத்தலும்.]

மன நிலை சீதையின் அற்பப் பிழையையும் எவ்வளவு கோரமாகவும் பூதாகாரமாகவும் காட்டுகிறது பாருங்கள் !

நஞ்சுடைய நாகத்தால் வசீகரிக்கப் பட்டுத் தவளையோ, தேரையோ தத்தித் தத்திப் போய் அதன் வாய்க்குள்ளே புகுந்துவிடும் என்று சொல்வதுண்டு. தன்னுடைய நிலையும் அப்படித்தான் ஆகிவிட்டதோ என்று பிரமிப்பது போல்,

நஞ்சனை யான்அகம்
புகுந்த நங்கையான் !

என்கிறாள்.

இந்நிலையில் 'பெண்களில் சிறந்தவள்' என்று பொருள்படும் 'நங்கை' என்ற சொல்லால் தன்னை அழைத்துக் கொள்வது எவ்வளவு மனக் கடுப்பை வெளியிடுகிறது !

'நான் தான் பிழைத்திருக்க விரும்பினாலும் எப்படித்தான் என்னைத் தாங்கிக் கொண்டிருக்கிறதோ இவ்வுலகம்? பூமி நாணத்தால் குறுகி என்னைப் பாதாளத்தில் தள்ளிவிட வில்லையே!' என்னும் பிரலாபம் சிகரமாக அமைகின்றது இப் பகுதிக்கு:

உய்ஞ்சனென் இருத்தலும்
உலகம் கொள்ளுமோ !

வெறுப்புணர்ச்சியின், கடுப்புணர்ச்சியின் அதீத நிலை. எங்கும் இல்லாத, என்றும் இல்லாத பழி வந்து புகுந்து விட்டதே என்ற உணர்ச்சியுடன் தானே, 'நஞ்சனையான் அகம் புகுந்த நங்கை' என்று தன்னை வெறுத்துரைத்தாள் ?

'மனம் புகுந்து மனையும் புகுந்த நான் பத்துத் தலைப் பாம்பின் வாய்த் தேரையானேனே ! மரணமே விடுதலை—' இது சீதையின் இதய நாதம்.



கணையாழியும் சூளாமணியும்

பி.ஸ்ரீ

5. இறந்து வாழ்வேன்!

பழியென்னும் சொல் எவ்வளவு காலம் இருக்குமோ, அவ்வளவு காலம் அந்தச் சொல்லுக்குப் பொருளாகத் தன் பழியும் இருக்கு மென்று சீதை நினைக்கிருள். 'சொல் பிரியாப் பழி' என்கிருள்.

இவ்வளவு பழியோடு கூடிய தன்னைப் போல் ஒரு கதா பாத்திரமாவது சிருஷ்டி செய்யப்பட்டிருக்கிறதா, எந்த ஆசிரியனாலும்? — என்று கூடச் சீதை அதிசயமாய்த் தனக்குத் தானே ஒரு கேள்வி போட்டுக் கொள்கிருள்.

'என்னைப் போல் வேறு யார் இருக்கிருர், யார் இருக்க முடியும் — வாழ்க்கையிலாவது கதையிலாவது?' என்று சீதை தனிமையுரையில் கூறுவதாய்க் காட்டுவது, சீதையின் கதையை அப்படியே உண்மை வரலாறு போல் நம் கண்முன் நடத்திக் காட்டும் கவி சாதுரியங்களில் ஒன்று.

இப்போது இந்தக் கவிதைக் கண்ணுடியில் சீதையை உண்மையாகவே பார்க்கிருேம்:

**சொற்பிரி யாப்பழி
சுமந்து தூங்குவேன்,
நற்பிறப் புடைமையும்
நாணும் நன்றரோ!
கற்புடை மடந்தையர்,
கதையில் தானுளோர்,
இற்பிரிந்(து) உய்ந்தவர்
யாவர் யானலால்?**

[சொற் பிரியாப் பழி — பழி என்ற சொல் உள்ளவரையில் பிரியாமல் நிற்கும் நிந்தை. தூங்குவேன் — தூங்குவேனுடைய; கவலையற்றிருக்கிற என்னுடைய. இல் பிரிந்து — இல்வாழ்க்கைக்கு உரிய கணவனைப் பிரிந்து. உய்ந்தவர் — பிழைத்திருந்தவர்.]

'சொற்பிரியாப் பழி' விஷயமாகச் சீதை தன்னைத் தானே கேட்டுக் கொண்ட கேள்விக்கு அந்தராத்மா விடை தருகிறது:

**எப்பொழு(து) இப்பெரும்
பழியின் எய்தினேன்,
அப்பொழு தேஉயிர்
துறக்கும் ஆணையேன்,
ஒப்பரும் பெருமறு
உலகம் ஓத,யான்
துப்பழிந்(து) உய்வது
துறக்கம் துன்னவோ?**

[ஆணையேன் — கடமையுடையவளாக இருக்கிறேன். ஒப்பரும் பெருமறு — ஒப்பில்லாத பெரிய பழிச்சொற்களை. உலகம் ஓத—உலகத்தவர் சொல்லும்படி. துப்பு அழிந்து-பெருமை கெட்டு. உய்வது-உயிர் வாழ்வது. துறக்கம் துன்னவோ—சொர்க்கம் பெறவோ?]

'கணவன் எங்கே வரப்போகிருன்?'— என்பது சீதை தனிமையுரையின் முதற் பகுதி. வந்தாலும் ஏற்றுக் கொள்ள மாட்டான்: ஏற்றுக்கொண்டாலும் உலகம் ஒப்புக்கொள்ளாது: ஆதலால் உயிரை விடவேண்டியது தான். இது தனிமையுரையின் இரண்டாவது பகுதி.

மூன்ருவது பகுதி

'**எ**ன் பழியை நான்தானே துடைத்துக் கொள்ளவேணும்' என்று கருதும் சீதை, பெண் குலத்தின் பெருமைக்கே

தான் பொறுப்பாளி யென்று நினைக்கிறாள். கணவன் மேலுள்ள மனவருத்தம், ஆண் குலத்தையே அன்பை அழிக்கின்ற குலம் என்று சொல்லவும் தூண்டுகிறது: 'அன்பழி சிந்தையராய ஆடவர்.'

பெண் குலத்தைத்தான் எவ்வளவு கர்வத்துடன் 'துன்பழி, பெரும் புகழ்க் குலம்' என்கிறாள். 'வானுயர் பெரும் புகழ்க் குலம்' என்று குறிப்பிடுகிறாள். ஆடவர்கள் அன்பழித்துத் துன்பம் பெருக்க, பெண்களோ அன்பு பெருக்கித் துன்பம் துடைத்து வானளாவிய பெரும் புகழ் சூடிக் கொள்கிறார்களாம்.

'இத்தகைய தாய்க் குலமாகிய பெரும் புகழ்க் குலத்தில் தோன்றிய நானே என் பழியைத் துடைத்துக் கொள்ள வேண்டும்' என்கிறாள்:

அன்பழி சிந்தைய —
ராய ஆடவர்,
வன்பழி சுமக்கினும்
சுமக்க! வானுயர்
துன்பழி பெரும்புகழ்க்
குலத்துள் தோன்றினேன்!
என்பழி துடைப்பவர்
என்னின் யாவரே?

[அன்பு அழி – அன்பை அழிக்கின்ற. வன்பழி - கொடிய பழி. துன்பு அழி – துன்பத்தை அழிக்கும். என்னின் யாவரே – என்னை யல்லாது வேறு யார்?]

'யான் துன்பழி பெரும் புகழ்க் குலத்துள் தோன்றினேன்' என்பதற்கு, துன்பத்தை அனுபவித்தறியாத பெரும் புகழ் வாய்ந்த ஜனகராஜ குலத்துள் சீதை தோன்றினாளென்று சாதாரணமாய்ப் பண்டிதர்கள் பொருள் கூறுவதுண்டு. இந்தப் பாட்டில் இப்படிப் பொருள் கூறுவது கவியுள்ளத்திற்குப் பொருத்தமான தன்று.

'அன்பழி சிந்தையராய ஆடவர்' என்று ஆண் குலத்தைக் கூறி விட்டு அந்த ஆடவர் குலத்தில் தோன்றிய கணவர் வன்பழி சுமந்தாலும் சுமக்கட்டும் என்ற பின், 'நானே துன்பழி பெரும் புகழ்க் குலத்துள் தோன்றினேன்' என்று சொல்லும்போது, தாய்க் குலத்தைத்தானே சீதை குறிப்பிட்டிருக்க முடியும்?

அன்பழி குலம் ஆடவர் குலம் என்றால் துன்பழி குலம் பெண் குலமாய்த்தானே இருக்க முடியும்? தன் பிறந்த வீட்டின் பெருமையைப் பிரமாதப்படுத்திப் பேசுவது ஜனக குல சுந்தரியான சீதைக்கு அழகில்லையே!

அன்பினுக் காகவே
வாழ்பவர் ஆர்?—அன்பில்
ஆவியும் போக்கத்
துணிபவர் ஆர்?

என்று பெண்ணுரிமை பேசுகின்றார் கவிமணி. இப்பெண்ணுரிமையைத்தான் பெண்ணின் வானுயர் பெரும் புகழாகச் சீதை பேசுகிறாள் என்பது வெளிப்படை. இது தனிமை யுரையின் மூன்றாவது படி.

நான்காம் பகுதி

இனி, 'நான் தான் சொற்பிரியாப் பழி சுமக்கின்றேன்; அவனுக்கு அப்படி என்ன வன்பழி சுமக்க வேண்டியிருக்கிறது?' என்று அவன் சார்பாகப் பரிந்து பேசுகிறது சீதை யுள்ளம்.

பிறர் மனை புகுந்த பெண்ணை விரும்புவது வீர தர்மமல்ல என்று பிராண நாயகன் நினைத்து விட்டால், அது எப்படி அவனுக்குப் பழியாகும்? 'புற உலகம் சொல்லும் பழிச் சொற்களுக்கெல்லாம் காரணம் நான் தானே?' என்கிறது சீதையுள்ளம்.

இந்த நிலையிலுள்ள சீதையைப் பாருங்கள்:

'பிறர்மனை எய்திய
பெண்ணைப் பேணுதல்
திறன்அல(து)' என்(று)
உயிர்க்(கு)
இறைவன் தீர்ந்தனன்;
புறன்அலர் அவன்உறப்
போது போக்கி,யான்
அறன்அல(து) இயற்றுவேன்,
என்கொண்(டு) ஆற்றுகேன்.

[பேணுதல் – விரும்புதல். திறன் அலது–வீர தர்மமன்று. உயிர்க்கு இறைவன் – பிராண நாயகன். புறன் - அயலாரிடம். அலர் உற - பழி கேட்க. அறன் அலது – அறம் அல்லாததை.]

ஐந்தாவது பகுதி

இனி, புறஉலகம் தூற்றும் அவனது பழியைக் குறித்துத் தான் என்ன செய்யக்கூடும் என்று ஆலோசிக்கிறாள். "இவரும் ஆடவராம்; மாற்றாளிடம் சிக்கிக்கொண்ட பெண்ணைக் காக்கவும் வலியில்லாத ஆடவர்!" என்று உலகம்

தாற்றும் பழியை ராமன் கேட்டுக் கொண்டிருக்க வேண்டுமே. தன் உயிர் நீங்கினுல் அந்தப் பழி அவர்களுக்கும் நீங்கும் என்று எண்ணமிடுகிருள். ஆதலால் மரணமடைய வேண்டும் என்று முடிவு கட்டுகிருள்.

இப்படி எண்ணமிட்டுக் கொண்டிருக்கும்போதே, தன்னுல் போக்க முடியாத வேறெரு குற்றமும் ராமனுக்கு உண்டு என்ற ஞாபகம் வருகிறது. அது வடு; பழியன்று.

உண்மையில் ராமனுக்கு ஒரு வடுவும் உண்டு; ஒரு பழியும் உண்டு. பழி சீதையால் ஏற்படுகிறது; வடு அவன் தன் வீர தர்மத்தைச் செய்யாததால் ஏற்படுகிறது.

பழி வடுவைக் காட்டிலும் பெரிது; வடுவைப் பழியின் பிஞ்சு என்று சொல்லலாம்.

வடுவை நீக்கிக் கொள்ள அவர் இங்கு வந்து அரக்கர்களோடு போர் செய்து தீரவேண்டும். அந்தப் போரில் அவர் வென்றாலும் வெல்லட்டும்; இறந்தாலும் இறக்கட்டும்; கடமை தானே பொறுப்பு; பலனுக்கு அவர் பொறுப்பாளியல்ல.

இத்தகைய நினைப்பில், அலட்சிய புத்தியும் உண்டாகிறது. அவர் யுத்தம் செய்யாமல் பழியுடன் செத்தாலும் சாகட்டும் என்று கூட உபேட்சிக்கிறது இத்தனிமையுள்ளம்.

இந்த உபேட்சையும் அலட்சிய புத்தியும் ஒரே கணத்தில் குமிழி யிட்டுத் தோன்றி அப்படியே அடங்கிப் போகின்றன. தன்னுல் ஏற்படும் பழியைப் பற்றிய எண்ணமே மறுபடியும் மேலோங்குகிறது. ஆதலால் இறந்தே தீர வேண்டும் என்பது தனிமை யுரையின் ஒரே முடிவு.

இப்படியெல்லாம் மனத் தராசில் வடுவையும் பழியையும், ஆண்மையையும் பெண்மையையும் நிறுத்து நிறுத்துப் பார்த்துக் கடைசியாகத் தராசையும்



தன்னையும் ஒருங்கே அழித்துக் கொள்ள ஒருப்படும் காவிய நாயகியைப் பாருங்கள் :

வல்லியல் மறவர் தம்,
வடுவின் தீர்பவர்,
வெல்லினும் வெல்கபோர் :
விளிந்து வீடுக !
இல்லியல் அறத்தையான்
இறந்து வாழ்ந்தபின்,
சொல்லிய என்பழி
அவரைச் சுற்றுமோ ?

[வல்இயல் – வலிமை வாய்ந்த. மறவர் - வீரர். வடு – குற்றம். விளிந்து வீடுக - செத்தாலும் சாகட்டும். இல் இயல் அறம் – இல்வாழ்க்கைக்குரிய தர்மம்.]

இந்த நிலையில் தன்னைப் பற்றிக் கொண்ட பழியும் அவரைச் சுற்றிக் கொள்ளாமலிருப்பதற்கு ஒரே ஒரு வழி தான் இருக்கிறதென்று சித்தாந்தம் செய்து விடுகிறாள். இல்லற வாழ்வே பழியற்ற வாழ்வு. ஆனால் அந்த இல்லறத்தைத் தான் இறந்து வாழ்ந்த பின் தன் பழி அவரைச் சுற்றுமோ என்று ஓர் இறுதிக் கேள்வி போடுகிறாள். இதன் பொருள் என்ன, பயன் என்ன ?

'இல்லியல் அறத்தை யான் இறந்து வாழ்ந்த பின்' என்பதற்குச் சாதாரணமாக 'இல்லறத்தை நான் கடந்து வாழ்ந்த பின்' என்று பொருள் சொல்லுகிறார்கள். 'சீதை இல்லறம் கடந்து வாழ்ந்தாளா ?' என்று கேட்டால், அரக்கர் ஊரில் வாழ்வதையே சீதை இப்படிக் குறிப்பிடுவதாய்ச் சொல்லுகிறார்கள்.

ஆனால் சீதை எவ்வளவோ கொடிய தற்சோதனை செய்துகொண்டு தன்னைப் பழித்துக் கொண்ட போதிலும், இல்லறத்தைக் கடந்து வாழ்ந்ததாக ஒப்புக் கொள்வதில் பொருளுமில்லை, பயனுமில்லை யென்றே தோன்றுகிறது. அப்படியானால் இங்கே பொருள்தான் என்ன? சற்றுப் பொறுத்துப் பாருங்கள்.

சீதைக்கு எதிரே தருவும் கொடியும் செறிந்து சோலைக்குள் ஒரு குட்டிச் சோலை போல் காட்சி தருகின்றன. தருவைத் தழுவிப் பூங்கொடி படர்ந்து மலர்களுடன் பொலிகின்றது.

செல்வம் மல்கு
செண்பகம் வேங்கை
சென்றேறிக்
கொல்லை முல்லை
மெல்லரும்(பு) ஈனும்
குற்றாலம்

என்று திருஞான சம்பந்தர் பாடியிருப்பது போல ஒரு காட்சி.

மாதவி மரச் செறிவு தான் தருவும் கொடியுமாய்ச் சீதையை எதிர் நோக்குகின்றது. இல் வாழ்க்கைக்குத் தான் எவ்வளவு பொருத்தமான அறிகுறி — அந்தத் தருவும் கொடியும் !

அப்படிப்பட்ட இல்வாழ்க்கை தான் தனக்கு இனிமேல் இல்லையே என்று இப்போது ஏங்குகின்ற சீதை யுள்ளம், என்ன முடிவு கட்டுகிறது ?

இருந்து வாழ முடியாத அந்த இல் வாழ்க்கையை இறந்துதான் வாழ வேண்டும் என்பது இப்போது சீதையின் இல்லற இலக்கு. அப்போது தான் தன்னால் அவர்களுக்கு ஏற்படும் பழியும் நீங்கும்.

இறப்பதைத் தான் இறந்து வாழ்வது என்கிறாள். இல்லியல் அறம் இப்போது சீதையிருக்கும் நிலையில் இறந்து தான் வாழப்படும் என்பது இங்கே பொருளும் பயனும்.

தனிமையுரையின் முடிவான பாட்டு, 'ஆதலால் இறத்தலே அறத்தின் ஆறு' என்று தொடங்குவதும் பொருத்தமாகிறது. வாழ்க்கையாகிய ராஜ பாதையில் தர்மம் கைகாட்டி மரம் போல் நிற்கிறது. ஜீவ யாத்திரை செய்வோருக்கு, 'நீ இந்த வழியே போ; அவன் அந்த வழியே போகட்டும்' என்று வழி காட்டுகிறது.

இந்தக் கைகாட்டி ஒருவனுக்குச் சிங்காசனத்தைக் காட்டுகிறது. வேறொருவனுக்குத் தூக்கு மேடையைக் காட்டுகிறது. 'மரணமே உனக்கு வழி' என்று சீதைக்குக் காட்டுகிறது.

சில நாளாகக் கைகாட்டி இப்படிக் காட்டி வந்தும் இவளுக்குச் சரியான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. கண்கொட்டாமல் அரக்கியர்கள் காவல் செய்து கொண்டிருந்தார்களல்லவா ?

இப்போதோ அவர்கள் உறங்கிக் கிடக்கிறார்கள். 'இதுதான் சமயம்' என்று கருதும் சீதை, எதிரேயுள்ள மாதவிச் செறிவினை உற்று நோக்கி, 'அதுதான் இடம்' என்று தீர்மானிக்கிறாள்.



கணையாழியும் சூளாமணியும்

பி.ஸ்ரீ

6. காரிருளில் மின்னொளி

சீதை எழுந்து நிற்கிறாள். தருவும் பூங்கொடியுமாய் ஏதோ ஓர் இயற்கைப் பூப்பந்தல் போட்டது போலக் காணப்படும் அந்தக் குட்டிச் சோலையில் பூக்கள் காற்றில் அசைகின்றன. அசைந்து 'வா, வா' என்று அழைப்பது போலத் தோன்றுகிறது.

தருவையும் கொடியையும் நோக்கி

தருமம் கைகாட்டிப் 'போ, போ' என்று செலுத்த, தருவைத் தழுவி மலர்ந்திருக்கும் மலர்கள் அவசரப் படுத்தி அழைக்க, சீதை தன்னைச் சுற்றிக் கிடந்த கட்டுக் காவலையும் ஒரு பார்வை பார்த்துப் போகிறாள். அந்தக் காவல்தான் இப்போது எவ்வளவு அலங்கோல நிலையில் செயலற்றுக் கிடக்கிறது.

தன்னைச் சுற்றியுள்ள காவலாளிகளைச் சீதை, 'தன்னைக் காப்பவர்' என்று கூட நினைத்திருக்க வில்லையாம். 'சாதல் சாப்பவர்' — அதாவது சாவதற்குக் கூடத் தனக்குச் சுதந்திரம் இல்லாமற் செய்து காவல் காப்பவர் — என்றே எண்ணியிருக்கிறாள்.

ஆம்; பரம ஏழைகளுக்குக் கூட உள்ள அந்தச் சுதந்திரமும் சீதைக்கு இல்லையே!

அந்தக் காவலாளிகள் அனுமனது வசிய நித்திரைக்கு உட்பட்டிருக்கிறார்கள் என்பது இவளுக்கு எப்படித் தெரியும்? தெரியாது. தன்னுடைய கற்பு என்னும் தவம் தான் அவர்களை இப்படி உறங்கச் செய்து தனக்கு மகத்தான ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்திருக்கிறதென்று சொல்லிக் கொள்கிறாள்.

இதே சமயம் பூக்களின் அழைப்பும் ஒத்துப் போகவே, சீதை கொடியும் தருவும் பூம்பந்தலுமாக இருந்த அந்த அழகான இடத்திற்கு வந்து விடுகிறாள்:

'ஆதலால் இறத்தலே
அறத்தின் ஆறெ'னாச்,
'சாதல்காப் பவரும்என்
தவத்திற் சாம்பினார்!
ஈதலா திடமும்வே—
றில்லை!' என்றொரு
போதுலாம் மாதவிப்
பொதும்பர் எய்தினாள்.

[ஆறு-வழி. எனா-என்று. சாம்பினார்—உணர்வழிந்து கிடக்கிறார்கள். போது—பூக்கள். உலாம்—அசையும். பொதும்பர்—மரச்செறிவு; புதர்; இளமரச் சோலை. எய்தினாள் — அடைந்தாள்.]

தனிமையுரையின் முடிவில் 'ஆதலால்' என்று வருவதும், அது இப் பாட்டின் முதல் வார்த்தையாக அமைந்திருப்பதும் இக்கவிக்கு விசேஷ ஆற்றலைத் தந்திருக்கிறது.

'இறத்தலே அறத்தின் ஆறு' என்று தருமம் கைகாட்டுவதற்கு உரிய காரண-காரியச் சங்கிலித் தொடராக அமைந்து விட்டது தனிமையுரை முழுதும்.

கொடியும் தருவும் எத்தகைய பழைய நினைவுகளைத் தோற்றுவிக்கின்றன; அந்தக் கொடியை எவ்வளவு பலமாக இழுத்து அறுத்து விடுகிறாள்! — 'இந்த அறுபட்ட கொடிதானே என் வாழ்க்கை' என்று சொல்லிக் கொள்வது போல!

கொடியும் கையுமாய்

சீதையை இப்போது பாருங்கள்:

சுற்றிய கொடிஒன்று
துணித்துத் தூயள், ஓர்
பொற்றடங் கொம்பினிற்
பூட்டிப், 'பூமியில்
நற்றவம் உடையென்யான்
ஆகில், நாயகன்
வெற்றிசேர் திருவடி
மேவுவேன்!' என்ருள்.

[பொற்றடங்கொம்பு - பொன் தடங் கொம்பு; அழகான பெரிய மரக்கிளை.]

'தூயள்' என்று சீதையை இங்கே குறிப்பிடுவதை ஊன்றி நோக்குங்கள். சீதையின் திருமுகம் இப்போது தூய நெருப்பாக ஜொலிக்கிறது. இல்லறத்தை இறந்து வாழப் போகும் மகா ஸங்கல்பத்துடன் நிற்கிருளல்லவா?

அந்தப் பூங்கொடியை அழகான பெரிய மரக்கிளை யொன்றில் உறுதியாகப் பூட்டுகிருள். சரி; அது தன்னைத் தாங்கக் கூடியது தான். இப்போது பூமியைப் பார்க்கிருள்.

ஒரு வீரன் தன் உயிரையே இழக்கக் கூடிய ஓர் இறுதிப் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு முன் பூமியையும் வானத்தையும் பார்த்துத் தன் உணர்ச்சிகளை வெளியிடுவதாக ஓர் ஆங்கிலக் கவி பாடியிருக்கிருன்.

மனிதனுக்கு மண் தாய், விண் தந்தை என்பது எவ்வளவு அழகான, பொருள் பொதிந்த, கருத்து!

ஆம், பூமிதேவி எல்லாருக்கும் தாய். சீதைக்கோ பூமியைத் தவிர வேறு தாயில்லை என்பது இதிகாசம்.

பூமியைப் பார்த்துக் கொண்டு, 'தாயே! என் கற்புக்கு நீதான் சாட்சி. பிழைத்திருந்து நாயகன் அடிகளில் குற்றேவல் செய்யும்படியான பாக்கியம் இனி எனக்கு இல்லை. நான் கற்பு என்ற தவமுடையவளானல் மரணமடைந்தாவது அவன் திருவடிகளை அடைவேன்' என்கிருள்.

'கற்பு என்பது அருந்ததிக்கு நீ கொடுத்த பிச்சைதான்!'

இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, 'அவன் திருவடி வெல்க' என்று அந்தராத்மா வாழ்த்துகிறது. தான் இறந்த பிறகாவது அவன் துஷ்ட ராட்சஸர்களை வதஞ் செய்து வெற்றி சூட வேண்டும் என்னும் ஆசை உள்ளுக்குள்ளே குமுறிக் கொண்டிருக்கிறது. இடையே தோன்றிய உபேட்சை இப்போது எங்கே?

காட்டிலே துணிந்து தொடர்ந்து வந்து கஷ்டங்களையும் அபாயங்களையும் வாழ்க்கைத் துணையாகப் பங்கு போட்டுக் கொள்ள முன்வந்த காலத்தில் ராமன் அவளை நோக்கி,

சீலம் இன்னதென்(று)
அருந்ததிக்(கு) அருளிய
திருவே!

[சீலம் - கற்பு முதலிய பெண்மைக் குணங்கள். திருவே – லட்சுமியே.]

என்று வாயார மனமாரப் புகழ்ந்தான்:



இப்போது உயிர்த் தியாகம் செய்யச் சித்தமாயிருக்கும் இந்த நிலையை என்னென்பது?

கொடியும் கழுத்துமாய்

இந்த முகத்தைப் பார்த்தால் 'அருந்ததி மனத்தாலும் நெருங்க முடியாது இந்தக் கற்பு!' என்றே சொல்லத் தோன்றுகிறது.

அது காதலன் கூற்று, இது கவிஞன் கூற்று:



என்(று)அருந் த்திமனத்(து)
எம்மை யாளுடைத்
துன்றருங் கற்பினாள்,
சுருதி நாயகன்
பொன்தரு மலர்ப்பதம்
வழுத்திப் பூங்கொடி
தன்தனிக் கழுத்திடைத்
தரிக்கும் எல்வையில் —

[துன்றருங் கற்பினாள் – நெருங்க முடியாத கற்பையுடைய சீதை- சுருதி நாயகன் – வேத நாயகனாகிய ராமன். வழுத்தி – துதித்து. தனிக் கழுத்திடை - ஒப்பற்ற கழுத்திலே. எல்வையில் - பொழுதில்.]

'எப்படிப்பட்ட மகோன்னதமான தியாகத்தால் மனிதர்களாகிய நம்மை யெல்லாம் ஆட்கொள்ளப் போகிறாள்!' என்று சீதையென்னும் அந்த லட்சியத்தைக் கவிஞன் சுட்டிக் காட்டுகிறான்.

இப்படிக் காட்டும்போதே, அவள் ராமனுடைய திருவடிகளை மனக் கண்முன் தரிசித்துக் கொள்கிறாள். சீதையின் அகக் கண்ணுக்கு இலக்காகும் அந்தத் திருவடிகளைத் தான்,

பொன்தரு மலர்ப்பதம்

என்று காட்டுகிறான் கவிஞன்.

'பொன் தரு மலர்ப்பதம்' வழுத்திய வண்ணம் பூங்கொடியும் கையுமாக இருந்தவள், திடீரென்று பூங்கொடியும் கழுத்துமாகிறாள். அனுமன் பார்த்துக் கொண்டு தானிருக்கிறான். என்னதான் செய்யப் போகிறாளோ இவ்வளவு நெருக்கடியில்?

ஒரு மின்னொளி

நீங்களே பார்த்துக்கொள்ளுங்கள் கவிதைப் பளிங்கிலே, காரிருளையும் மின் வெட்டையும்:

கண்டனன் அனுமனும்;
கருத்தும் எண்ணினான்;
கொண்டனன் துணுக்கம்,
மெய்
தீண்டக் கூசுவான்,

'அண்டர் நாயகன் அருள்—
தூதன் யான்!' எனத்
தொண்டைவாய் மயிலினைத்
தொழுது தோன்றினன்.

[துணுக்கம் — நடுக்கம். மெய் தீண்டக் கூசுவான் — உடம்பைத் தொட்டாவது விலக்க வேண்டுமென்று கருதி, உடனே அதற்கு மனம் கூசினவனாய். அண்டர் நாயகன் அருள் தூதன் — தேவர் தலைவனாகிய ராமன் அனுப்பி யருளிய தூதன். யான் என — நான் என்று வாய்விட்டுச் சொல்லிக் கொண்டே. தொண்டை வாய் — கோவைப் பழம் போல் சிவந்த வாய். மயிலினை — மயில் போலும் சாயலையுடைய சீதையை.]

சீதையின் பயங்கரமான நோக்கம் தெரிந்ததும் அனும னுடம்பில் ஒரு நடுக்கம் உண்டாகிறது', உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை. தொட்டிழுத்தாவது அந்த அபாயத்திலிருந்து காப்பாற்றி விடவேண்டும் என்று தான் முதல் முதல் தோன்றுகிறது.

ஆனால் தூயவளைத் தொடக்கையும் மனமும் கூசுகின்றன. மேலும் அனுமனை அதற்கு முன் அவள் பார்த்ததே இல்லை!

அரக்கன் தான் மாறு வேடம் பூண்டு இப்படி வந்திருக்கிறான் என்று அவள் எண்ணி விடவும் கூடுமே! அதிகமாய்ப் பேசுவதற்கும் அவகாசம் இல்லையே.

இவ்வளவு நெருக்கடியான நிலைமையைச் சமாளிக்க வேண்டும். மகா மேதாவியான அனுமனுள்ளத்தில் பளிச் சென்று மின்னொளி போல் ஓர் ஆலோசனை பிறக்கிறது. கவிஞனுள்ளத்திலே உள்ளொளி வீசுவது போல.

மிகவும் சுருக்கமான ஆலோசனை தான். இன்னதென்று தெரிந்த பிறகு நமக்கும் சாதாரணமாகவே தோன்றும்.

அவள் யாரை நினைத்துத் தவித்துக் கொண்டிருக்கிறாளோ, எந்தப் பெயரை இந்த ராட்சஸ பூமியில் அவள் காதால் கேட்டதில்லையோ, எவர் வாயும் உச்சரிப்பதில்லையோ, அந்தக் காதற் பெயரை, ராம நாமத்தைச் சொல்ல வேண்டியதுதான்.

இந்த ராட்சஸ பூமியில் எவரும் சீதையிடம் சொல்லத் துணியவே மாட்டார். இந்த ராமநாமம் சீதையின் காதலுக்கும் பக்திக்கும் ஒருங்கே இலக்காயிருப்பதுபோல், ராவண கோபத்திற்கும் பொறுமைக்கும் ஒரு தனிப்பேரிலக்கல்லவா?

'இந்த நாமத்தை இங்கே இப்போது சொல்லிக் கவனத்தைக் கொஞ்சமாவது வசீகரிக்க வேண்டும்' என்பது தான் அனுமனுடைய ஆலோசனை. எப்படியாவது இந்த அபாயகரமான நிலையைக் கொஞ்சமாவது தாமதிக்கச் செய்து விட்டாலும் போதுமே.

அந்தச் சொற்ப அவகாசத்திற்குள்ளே வேறோர் ஆலோசனை செய்து கொண்டு எப்படியாவது சமாளித்துக் கொள்ளலாம் என்பதாக அனுமனது பக்தி நிறைந்த மதிநலம் நம்புகிறது.

ராமநாமத்தைச் சொன்னாலும் சீதைக்கு ஐயம் நீங்காது என்பது அனுமனுக்குத் தெரிந்தது தான். மாரீசன் கற்பித்த பாடத்தைச் சீதை மறந்து விட்டாளா, என்ன? அந்த மாய அரக்கன் ராமன் குரலையே உபயோகிக்கவில்லையா?

என்றாலும் சீதையின் உள்ளம் கவர்ந்த திருப்பெயரை, எந்த அரக்கனும் பேசக் கூசும் பெரும் பெயரை, இவள் காதில் போட்டுப் பார்த்துக் கொஞ்சம் அவகாசம் பெற்றுக் கொள்ளவேண்டும். எவ்வளவு விரைவாக ஆலோசனை முடிகிறது; முற்றுப் பெறுகிறது!

மரக் கிளையில் பூட்டியிருந்த கொடியைத் தன் கழுத்தில் சேர்த்து ராமனைத் தியானித்துக் கொண்டே சுருக்கிட்டுக் கொள்ளும் சமயத்தில் திடீரென்று ராமநாமம் காதில் விழுகிறது. சீதை ஆச்சரியப்படுகிறாள்.

சீதையின் அவநம்பிக்கைக்கும் குறைவில்லை. அனுமன் எதிர்பார்த்தது தான். சீதையின் தயக்கமும் எதிர்பார்த்தபடியே அடுத்த படியாக என்ன செய்வதென்று தீர்மானிக்கச் சிறிது அவகாசம் கொடுத்து விடுகிறது.

இப்போது தன்னைச் சீதை பார்க்கும் படி அனுமன் எதிரே வருகிறான். வரும் போதே சில வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டு வருகிறான்.

வாய் பேசுகிறது. உள்ளம் அடுத்த படி என்ன வென்று ஆலோசிக்கிறது, ராமனருளால் ஒவ்வொரு படியாகக் கண்டு கொள்ளப் போகிறான் ராம பக்தன்.

'எனக்கு ஒரு படி காட்டினால் போதும்' என்பது பக்தன் பிரார்த்தனை. எல்லாப் படிகளையும் ஒரே அடியாகக் காட்டி விட்டால் கிறுகிறுப்பு வந்து விடுமோ?—என்பது பக்தன் மனநிலை



கணையாழியும் சூளாமணியும்

பி.ஸ்ரீ

7. நம்பிக்கையின் வெற்றி

சீதை தன்னைப் பார்க்குமாறு அவளுக்கெதிரே அனுமன் வருகிறான். அந்த இரவில் இந்த வானர சொரூபத்தைத் திடீரெனக் காண்பது சீதைக்கு அச்சத்தையும் ஐயப்பாடுகளையும் ஒருங்கே விளைக்கக் கூடுமல்லவா?

முதலாவது பேச்சு

அதற்காக, அனுமன் தான் வரும்போதே, எத்தனையோ வானர வீரர்கள் ராமன் கட்டளையைத் தலை மேல் தாங்கித் தேடப் போயிருக்கிறார்கள் என்று சொல்லுகிறான். அதற்கும் முன்பே, தான் ராமன் ஆணையால் அங்கு வந்து சேர்ந்ததாகச் சொல்லி விட்டான்.

ராமன் ஆணையோடு அருளும் தனக்குக் கிடைத்திருப்பதாகவும் தெரிவிக்கிறான். அதற்குரிய நல்வினையாகிய தவத்தைச் செய்திருக்கிறானாம். எனவே இவளுடைய திருவடிகளைத் தரிசிக்கும் பேறு தனக்கே கிடைத்திருக்கிறதாம்.

ஏதாவது சொல்லாமல் இருந்தால் அச்சமும் ஐயப்பாடும் அதிகரிக்குமே என்பதற்காக இப்படியெல்லாம் சொல்லின் செல்வன் பேசுவதாக ஊகிக்கலாம்:

அடைந்தனென் அடியனேன்
  இராமன் ஆணையால்;
குடைந்(து)உல கனைத்தையும்
  நாடும் கொட்பினால்
மிடைந்தவர் உலப்பிலர்;
  தவத்தை மேவலால்
மடந்தை! நின் சேவடி
  வந்து நோக்கினேன்.

[குடைந்து—சிறிது இடமும் விடாமல் அரித்து. உலகனைத்தையும்—உலகமெல்லாம். கொட்பினால்—கொள்கையால்; கோட்பாட்டினால். மிடைந்தவர்—நெருங்கிப் போன வானர வீரர்கள். உலப்பிலர்—முடிவில்லாதவராவர்; மிகவும் பலராவர். மேவலால்—அடைந்திருந்ததால். மடந்தை—மடந்தையே; சீதையே. சேவடி—சிவந்த திருவடிகள்.]

'மடந்தை! நின் சேவடி வந்து நோக்கினேன்' என்று 'அண்மை விளி'யாக அமைந்திருப்பது அனுமன் பேசிக் கொண்டே சீதையை நோக்கி நெருங்கி வருகிறான் என்பதைக் காட்டுகிறது.

சீதை முகத்தை நிலவொளியில் அனுமன் பார்க்கிறான். ஆனால் அனுமன் முகத்தைச் செவ்வையாகச் சீதை இன்னும் பார்க்கவில்லை.

அனுமன் வந்து கொண்டிருக்கும் சோலைப் பகுதியில் நிலவொளி செவ்வையாக விழவில்லையென்று கருத வேண்டும்.

சீதையின் முகத்திலே அவநம்பிக்கையைத் தான் இன்னும் காண்கிறான் அனுமன். ஆகவே, ராமன் வராததற்குக் காரணம் கூறுகிறான்:

ஈண்டுநீ இருந்ததை
  இடரின் வைகுறும்
ஆண்தகை அறிந்திலன்;
  அதற்குக் காரணம்
வேண்டுமே? அரக்கர்தம்
  வருக்கம் வேரொடு
மாண்டில; ஈதலால்
  மாறு வேறுண்டோ?

[ஈண்டு–இங்கே. இடரின் வைகுறும்–உன்னைப் பிரிந்ததால் ஏற்பட்ட துன்பத்தில் தங்கியிருக்கும். ஆண்தகை – ஆண்மைக் குணமுள்ள ராமன். அறிந்திலன்–அறிந்தானில்லை. வேண்டுமே–வேண்டுமோ; சொல்ல வேண்டுமோ? அரக்கர் தம் வருக்கம் - ராட்சஸ வர்க்கம்; அரக்கர் கூட்டம். மாண்டில–மாண்டு போகவில்லை யென்பதுதான். ஈது அலால்–இதுவே யல்லாமல். மாறு வேறுண்டோ - இதற்கு மாறாக வேறு ஒன்றுமில்லை.]



கழுத்தைச் சுற்றிய கொடி இன்னும் அப்படியே இருக்கிறது. முகத்திலே அனுமனைப் பற்றிய ஐயப்பாடும் அப்படியே இருக்கிறது.

'அம்மா, சந்தேகம் வேண்டாம்' என்று மூன்றாந் தடவையாகவும் பேசுகிறான்:

'ஐயுறல்; உள(து) அடை–
யாளம்; ஆரியன்
மெய்யுற உணர்த்திய
உரையும் வேறுள;
கையுறு நெல்லியங்–
கனியிற் காண்டி
யால்;
நெய்யுறுவிளக்கனாய்!
நினையல் வேறென்'
றான்.

[ஐயுறல் – ஐயம் கொள்ள வேண்டாம். உளது அடையாளம் – அடையாளப் பொருள் என்னிடம் உள்ளது. ஆரியன்–பெரியோனாகிய ராமன். மெய்யுற–உண்மை விளங்குமாறு. உணர்த்திய–சொல்லி அனுப்பின. உரையும் – அடையாள வார்த்தைகளும். வேறு உள – வேறு உள்ளன. கையுறு–உள்ளங்கையில் பொருந்திய. நெல்லியங் கனியின் – அழகிய நெல்லிக்கனி போல. காண்டி–காண்பாயாக. ஆல் — அசை. நெய்உறு விளக்கு அனாய் – நெய் நிறைய விட்டு எரியும் திருவிளக்குப் போன்ற திருமேனி விளக்கத்தையுடைய

தா பிராட்டியே. நினையல் வேறு — வித்தியாசமாக நினைக்க வேண்டாம்.]

அவநம்பிக்கையின் விசித்திரப் போக்கு

'ஐயுறல்' என்று ஆரம்பிக்கிற இப் பாட்டு 'நினையல் வேறு' என்று முடிவதைப் பார்க்கும்போது, சீதையின் ஐயமும் அவநம்பிக்கையும் குறைவதற்கு மாறாக அதிகரிக்கின்றனவோ என்று கூடத் தோன்றுகிறது.

மானாக வந்தான் ஒரு மாய அரக்கன்: இப்படிக் குரங்காகவும் ஓர் அரக்கன் வந்து வஞ்சிக்கவும் கூடுமே!—எண்ணக் கூடியதுதானே?

'இதுவும் அரக்கர் வஞ்சனைதான்!' என்று சீதை நினைத்து விட்டதாக அனுமனே ராமனிடம் தெரிவிப்பதாய்த் 'திருவடிதொழுத படல'த்தில் ஒரு பாட்டும் வருகிறது.

'எந்த அரக்கனும் சொல்லாத ராமநாமத்தை இந்தப் புதிய அரக்கன் சொல்லுகிறான்' என்றுதான் சீதை முதன் முதல் நினைத்து விட்டாளாம். இதில் விசேஷம் என்னவென்றால், இந்தப் புதிய வஞ்சனைக்காகச் சிறிது நன்றியறிவும் தோன்றுகிறது சீதை யுள்ளத்திலே!

வஞ்சிக்கவும், அஞ்சச் செய்யவும் எத்தனையோ வழிகள் இருக்கும்போது, தன் உள்ளத்திற்கு இன்னமுதாய்த் தான் கேட்க அலந்து போயிருந்த காதலன் பெயரைச் சொல்லும் அரக்கன் ஏதோ கொஞ்சம் கருணையுள்ளவனாகத் தானே யிருக்க வேண்டும்!

எனினும் இப்போது அவனால் வஞ்சிக்க முடியாது. அந்த ராம நாமத்தைக் கேட்டுக் கொண்டே சொர்க்கம் போய் விடலாம்!

சுருக்கு இன்னும் இறுகவில்லை கொடி சுற்றிய கழுத்தோடு தான் இப்படியெல்லாம் நினைவுகள்.

தன்னை நோக்கி அந்த நினைவுகளைச் சீதை வெளியிட்டதாக அனுமன் ராமனிடம் தெரிவிக்கிறான்:

'வஞ்சனை அரக்கர்
செய்கை இது!' என
மனக்கொண் டேயும், 14

'அஞ்சன வண்ணத்
தான்தன் பெயர்உரைத்(து)
அளியை! என்பால்

துஞ்சுறு பொழுதில்
தந்தாய் துறக்கம்!' என்(று)
உவந்து சொன்னாள்,



மஞ்சென வண்ணக்
கொங்கை வழிகின்ற
மழைக்கண் நீராள்.

[அஞ்சன வண்ணத் தான் - அஞ்சனம் போலும் நிறமுடைய ராமன். அளியை—அருளுடையவன் நீ. துஞ்சுறு - இறக்கும். துறக்கம் — (இங்கே) நல்ல கதி. மஞ்சு — மேகம். வண்ணம் — அழகு.]

'இரக்கமுள்ள அரக்கனே! நான் சாகும் சமயத்தில் ராமநாமத்தை என் காதில் போட்டு நல்ல கதியைத் தந்து விட்டாய்!' என்று சொல்லுகிற மன நிலையைப் பாருங்கள்.

கண்ணீர் மழை போலப் பெருகி மார்பில் வழிகிறது. மழைக்கிடையே மின் வெட்டுவது போல் முகத்திலே ஓர் உவகை; ஓர் இளஞ் சிரிப்பு—ஆம், ஒரு மின்னற் சிரிப்பு.

ஒரு வாலையும் ஒட்டவைத்துக் கொண்ட அரக்கன், ராம நாமமும் சொல்லத் துணிந்த அந்தக் கருணை மட்டுமா சீதை உள்ளத்தில் பதிந்தது? அப்படிப் பட்ட குரலையே எத்தனையோ நாளாகச் சீதை கேட்டதில்லையே இந்த ராட்சஸ பூமியில்!

உள்ளொளி காட்டும் அடுத்தபடி

அன்று இரவு நல்ல நிலா. ஆனால் அந்தச் சோலையில் அவ்வளவு வெளிச்சமில்லை தான். அடர்ந்த கிளைகளுக்கு ஊடே சிற்சில இடைவெளி வழியாக நிலாக் கதிர்கள் நுழைந்து வருகின்றன, முத்துச் சுடர்கள் போலே.

அந்த நிலாச்சுடர் தன் முகத்தில் வந்து விழுமாறு வசதியான ஓர் இடத்திற்கு வந்து வணங்கி நிற்கிறான் அனுமன். இப்போது தான் சீதை அனுமனைச் செவ்வையாகப் பார்க்கிறாள்.

ஆ, என்ன முகம்! அப்பேர்ப்பட்ட முகத்தை இலங்கையில் பார்த்ததேயில்லை:

என்றவன் இறைஞ்ச
நோக்கி, இரக்கமும்
முனிவும் எய்தி,
'நின்றவன் நிருதன்
அல்லன்; நெறிநின்று
பொறிகள் ஐந்தும்
வென்றவன்; அல்ல—
னாகில் விண்ணவ
னாக வேண்டும்!
நன்(று)உணர் வுரையன்;
தூயன்; நவையிலன்
போலும்!' என்னா—

[முனிவு—கோபம். நிருதன் — அரக்கன். நெறி—ஒழுக்க நெறி. நன்று உணர்வு உரையன் — நல்லறிவைக் காட்டும் சொற்களையுடையவன். நவையிலன் போலும்—குறைந்த பட்சம் குற்றம் இல்லாதவன் போலும்.]

நோக்கம் தடைப்பட்டது குறித்துக் கோபமும் உண்டாகிறது. ஆனால் இதுவோ ராட்சஸ மூஞ்சி? நெறி நின்று பொறி வென்ற அதி வீரனின் திருமுகமன்றோ?

'இதுவும் என்ன மாரீசமோ?' என்ற ஐயம் இன்னும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து குமிழியிட்டு வருகிறது. மாய மான் கற்பித்த பாடம் அப்படி! எனினும் 'தற் கொலை' எண்ணம் நழுவி விட்டது.

ராம நாமத்தின் வெற்றி

ராமன் மேலுள்ள அன்பு இவ்வளவு காலம் சாக விடாமல் காத்துக் கொண்டிருந்தது. இப்போது உச்சரித்த ராம நாமமோ, உணர்வை உருக்கிப் புதிய உயிர் தந்து விடுகிறது:


அரக்கனே யாக!
வேறோர் அமரனே
யாக! அன்றிக்
குரக்கினத்(து) ஒருவ
னேதான் ஆகுக!
கொடுமை யாக!
இரக்கமே யாக!
வந்திங்(கு) எம்பிரான்
நாமம் சொல்லி,
உருக்கினன் உணர்வைத்
தந்தான் உயிர்! இதின்
உதவி யுண்டோ?

[அமரன் — தேவன். குரக்கினம் — குரங்கின் கூட்டம். இதின் — இதைக் காட்டிலும்.]

சிறகொடிந்து கிடந்த சம்பாதிக்குப் புதிய சிறகு தந்த திருநாமம் சீதைக்குப் புதிய உயிர் தந்து விடுகிறது. சாகும் போது வாலிக்குக் கதி தந்த திருநாமம் சீதையைச் சாவிலிருந்து காப்பாற்றி விடுகிறது. கடல் தாவிய அனுமனுக்கு வழிகாட்டிய ராமநாமம் இவன் வாயிலாக இவளுக்கும் வழி காட்டியாகிறது.

சுந்தர ராமாயணம்

கணையாழியும் சூடாமணியும்



பி.ஸ்ரீ

8. 'வீர, நீ யாவன்?'

'ஹாம்லெட்' நாடகத்தை ஏழாவது தடவை பார்க்கும்போது முதலாவது தடவை ஏற்பட்டதைக் காட்டிலும் அதிக வியப்பு ஏற்படுகிறது என்கிறார் ஷேக்ஸ்பியர் — ரஸிகர் ஒருவர்.

கம்பனில் வரும் சீதை தனிமையுரையை நான் பல தடவை படித்திருக்கிறேன்; இது பொருளாகப் பல தடவை சொற்பொழிவாற்றியும் இருக்கிறேன். ஒவ்வொரு தடவையும் வியப்புணர்ச்சி அதிகரிப்பதை என்னிடத்திலும் பிறரிடத்திலும் கண்டிருக்கிறேன். இது கம்பனுடைய நாடக நயம் நிரம்பிய பல வேறு பகுதிகளுக்கும் பொருந்துவதாகும்.

புதிய சிருஷ்டி

மகா கவியின் உள்ளத்தை உடனே ஆழங் கண்டு அறிந்து கொள்ள முடியாது. பல தடவை மூழ்கி முத்துக் குளித்துத்தான் அனுபவித்துத்தான் அந்த முழுச் செல்வத்தையும் உணர்ந்து கொள்ள இயலும். பத்திரிகை போலப் படித்துத் தள்ளிவிடக் கூடியதன்று கவிதை.

இதனால், கம்பனைப் போன்ற மகா கவிகளின் வாக்கிலே எளிமையும் தெளிவும் இல்லையென்று அர்த்தம் இல்லை. அபூர்வ எளிமையையும் அதிசயத் தெளிவையும் கடல் போன்ற பொருளையும் ஒருங்கே காண்கிறோம், உதாரணமாகச் சீதை தனிமையுரையிலே.

சில கவிகள் சில வகை உள்ளங்களை விசேஷமாக வசீகரிக்கக் கூடும். உதாரணமாக, வால்மீகியின் இயற்கை வருணனைகளும் சங்கப் புலவர்களின் இயற்கை வருணனைகளும் சிலருள்ளங்களைப் பெரிதும் கவர்ந்திருக்கின்றன. ஆழ்வார் — நாயன்மார்களின் பக்திப் பாடல்கள் சிலரை உருக்கி உணர்ச்சி மயமாக்கி மெய்ம்மறந்திருக்குமாறு செய்யக் கூடும். சிலப்பதிகாரத்தின் நடையும் போக்கும் இசைப்பாடல்களும் புலமைப் பேரின்பத்தின் சிகரமாகச் சிலருக்குத் தோன்றவும் கூடும்.

பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலான நூல்களில் ஈடுபடுவோரும் சில சமயங்களில் அக்கவியின்பத்தைக் கம்பனின் கவியின்பத்தோடு ஒப்பிட்டுப் பேசுவதுண்டு. பாரதியாரின் மேதையையும் பாடல்களையும் கம்பன் மேதையோடும் பாடல்களோடும் ஒப்பிடத் துணிந்து, பாரதியாரின் எளிமைதான் எங்களுக்கு விளங்குகிறது என்று இந்நாளில் சிலர் கூறவும் கேட்டிருக்கிறோமல்லவா?

சீதை தனிமையுரை போன்ற கம்பராமாயணப் பகுதிகளோ பலவகை உள்ளங்களுக்கும் ஒருங்கே திருப்தியளிக்கின்றன. மனோபாவத்திற்கு மட்டுமல்ல, ஆத்ம தாகத்திற்கும் தாபத்திற்கும் அமுதமாக உள்ளவை.

'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்று சாதாரணமாய்ச் சொல்லுகிறார்களல்லவா? இந்தக் கல்விப் பெருந் திறனே சிருஷ்டி சக்திக்கு ஓரளவு

இடையூறாகி விடுகிறது என்று கூட ஓர் இலக்கிய நண்பர் கூறத் துணிந்தார். ஆனால் காய்தல் உவத்தல் இன்றி இத் தனிமையுரையை நன்றாகப் படித்துப் பார்த்தால் கம்பனுடைய கவிப் பெருமைக்குக் கல்விப் புலமை அரண் செய்கிறதென்றே தெரியவரும்.

கற்ற கலைகளைக் காட்டிலும் கல்லாக் கலை யாகிய, தனிப் பெருங் கவித் திறனையே ரஸிகர் பலரும் கம்பனில் காண்கிறார்கள்; தனிமையுரை முதலான கட்டங்களில் கண்டு கண்டு பரவசமாகிறார்கள்.

வால்மீகியில் இந்தத் தனிமையுரை வேறுவிதமாக அமைந்திருக்கிறது என்பதை ஏற்கெனவே கண்டோம். கம்பனுடைய தனிமையுரை மொழி பெயர்ப்பன்று; தழுவலுமன்று; ஒரு புத்தப்



புதிய சிருஷ்டி; வால்மீகியையும் கம்பனையும் படித்துப் படித்து இவ்வுண்மையை நன்குணர்ந்து கொள்வது நலம்.

மேலெ முந்தவாரியாகப் பார்ப்பவர்கள் சாதாரணமாக இந்த இரண்டு காட்சிகளுக்கிடையே மூன்று வித்தியாசங்களைக் காண்பர். முதலாவது வித்தியாசம், அனுமன் தன் மந்திரசக்தியால் அரக்கியரை உறங்கச் செய்தான் என்பது. இந்த வேறுபாட்டின் அவசியம் குறித்து ஏற்கெனவே விவகரித்திருக்கிறோம்.

ஒரு சிங்காரப் பின்னணி

இனி அடுத்த வித்தியாசம். பின்னலை மரக்கிளையில் மாட்டித் தூக்குப் போட்டுக் கொள்வதே நலம் என்று, சீதை அனுமன் மறைந்திருந்த சிம்சுபா விருட்சத்தின் அடியிலேயே வந்து சேர்ந்ததாக வால்மீகி சொல்லுகிறார். அந்த மரக்கிளையைப் பிடித்துக்கொண்டு சீதை நின்றதும் சுப சகுனங்கள் தோன்றின என்கிறார்.

கம்பனோ அப்படிச் சொல்லாமல் எதிரேயுள்ள மாதவிப் பொதும்பரை அடைந்து, தருவும் கொடியுமாயிருந்த அந்தச் சிங்கார இள மரக்காவில் தற்கொலை புரிந்து கொள்ள முயன்றாள் என்று கூறியுள்ளான். இந்தச் சிங்காரப் பின்னணி குறித்து நாம் ஏற்கெனவே தெளிவாகவும் விவரமாகவும் தெரிந்து கொண்டிருக்கிறோம்.

மூன்றாவது வேறுபாடு

இனி, வேறொரு வித்தியாசத்தையும் காண்போம். கம்பனில் காணப்படுவதுபோல் இவ்வளவு நெருக்கடியாக இறுதிக் கட்டம் வால்மீகத்தில் அமைக்கப்படவில்லை. 'மனுஷ்ய பாஷையால் பேசலாமா? அல்லது வியாகரண லட்சணங்கள் பொருந்திய ஸம்ஸ்கிருத மொழியால் பேசலாமா?' என்று ஆலோசிக்கிறான் அனுமன். ஸம்ஸ்கிருதத்தில் பேசினால் மோசஞ் செய்ய ராவணனே இந்த உருவத்தில் வந்திருக்கிறானென்று சீதை அஞ்சக் கூடுமே; எனவே கோசல நாட்டார் பேசும் மனுஷ்ய பாஷையிலேயே பேசுகிறானும்.

என்ன பேசுகிறான், தெரியுமா? மரக்கிளைகளில் மறைந்துகொண்டே மதுரமான வார்த்தைகளால் ராம சரித்திரத்தைச் சொல்லத் தொடங்குகிறான். இந்த விருத்தாந்தத்தைக் கேட்டால் சீதைக்கு நம்பிக்கை யுண்டாகுமென்று நினைக்கிறான்.

'இட்சுவாகு குலத்தில் தசரதர் என்று ஒரு ராஜா இருந்தார்' என்று ஆரம்பமாகிறது இந்த வரலாறு. தசரதர் பெருமையை வருணித்த பின், 'அவருடைய மூத்த புதல்வனுக்கு ராமன் என்று பெயர்' என்று சொல்லி ராமனுடைய பெருமையையும் வருணிக்கத் தொடங்குகிறான்.

ராமன் தன் மனைவியோடும் தம்பியோடும் நாடு விட்டுக் காடு புகுந்ததையும் தெரிவிக்கிறான். கரதூஷணர் ஆதிய அரக்கர்களின் வதத்தையும் பிரஸ்தாபிக்கிறான். 'ராவணன் சினங்கொண்டு பொன்மான் என்ற மாயையால் ராம லட்சுமணரை வஞ்சித்துச் சீதையை

அபகரித்தான்' என்பதையும் தெரிவிக்கிறான்.

பிறகு சுக்கிரீவ சிநேகம், வாலி வதம், சுக்கிரீவ ராஜ்யாபிஷேகம், வானர வீரர்கள் எல்லாத் திசைகளிலும் போய்த் தேடுதல் எல்லாம் முறையாகப் பிரஸ்தாபிக்கப் படுகின்றன.

அப்பால், 'அவள் இங்கே இருக்கிறாளென்று ஸம்பாதியென்னும் கழுகு சொல்லக் கேட்டு நானும் அவளைப்



பார்க்க விரும்பி நூறு யோசனை விஸ்திரணமுள்ள இந்தச் சமுத்திரத்தை அதிவேகமாய்த் தாண்டினேன். இங்கே தேடும்போது பாக்கிய வசத்தால் அவளைக் கண்டேன். உருவத்திலும் நிறத்திலும் ஒளியிலும் ராமன் எனக்கு வருணித்தது போலவே இருக்கிறாள்' என்று சொல்லி முடிக்கிறான் அனுமன்.

இது கேட்ட ஜானகியின் முதலாவது உணர்ச்சி அளவில்லாத ஆச்சரியம். கறுத்து நீண்டு சுருண்ட தலை ரோமத்தையுடைய சீதை பின்னலால் சுற்றப்பட்ட முகத்தை நிமிரச்செய்துகொண்டு சிம்சுபா விருட்சத்தை நோக்குகிறாள்.

இப்போது பய உணர்ச்சியும் ஏற்படுகிறதாம். அனுமனுடைய வார்த்தை கேட்ட ஆனந்த உணர்ச்சியும் சேர்ந்து கொள்கிறது.

அனுமனை மகா தேஜஸ்வியாகக் காண்கிறாள். 'உயிர் பெற்றேன்' என்று உடனே நம்பிக்கையும் அடைகிறாள். 'உதிக்கும் அருணனைப்போல் என்பிரிய நாதன் வருவதைத் தெரிவிக்க வந்த தூதனே?' என்றும் ஆனந்தப்படுகிறாள்.

அடுத்த சர்க்கத்தில் சீதையின் சந்தேகமும் வருணிக்கப்படுகிறது. 'இந்த ஜந்து மாயையா யிருக்குமோ?' என்று

மயங்கி நடுங்குகிருள். மெதுவாய் அழுகிருள். 'ஒருவேளை, இதுகனவோ?' என்றும் சந்தேகிக்கிருள். சொப்பனத்தில் குரங்கைக் காண்பது நல்ல சகுனமில்லை யென்றும் நினைக்கிருள்.

தான் எப்போதும் ராம ராம வென்று சொல்லிக் கொண்டிருப்பதால் அதற்குத் தகுந்த வார்த்தைகள் காதில் விழுவதாகவும் எண்ணமிடுகிருள். அனுமனுடைய உருவமும் வார்த்தையும் தன் உள்ளக் கற்பனைதான் என்றும் நினைக்கிருள்.

அனுமன் மரத்திலிருந்து இறங்கி அதிக வினயத்துடன் சீதைக்கு அருகே போய்த் தலைமேல் கைகூப்பி வணங்குகிருன். 'தாங்கள் யார்?' என்று கேட்டு விடுகிருன். சீதையும், 'தசரத சக்கரவர்த்தியின் மருகி; ஜனக புத்திரி; ராம பத்தினி' என்று பதில் சொல்லி விடுகிருள், பளிச்சென்று. நாடு விட்டுக் காடு புகுந்த கதையையும் சொல்லுகிருள்.

அனுமன் சீதைக்கு ஆறுதல் உண்டாகுமாறு ராமனுடைய க்ஷேம சமாசாரத்தைத் தெரிவிக்கிருன். பிறகு இருவரும் வெகு நம்பிக்கையாய்ப் பேசிக் கொள்ளுகிருர்கள்.

இதற்கு அப்பால் சீதை மறுபடியும் அவநம்பிக்கை கொள்வதாக வால்மீகி சொல்லுகிருர். சீதையுள்ளம் நம்பிக்கைக்கும் அவநம்பிக்கைக்கு மிடையே ஊஞ்சலாடுகிறது.

சீதையை மகிழ்விக்குமாறு அனுமன் மறுபடியும் சில வார்த்தைகள் சொல்லி 'ராவணன் இல்லை நான்' என்று உறுதி கூறுகிறன். இந்த விதமாகச் செல்லுகிறது வால்மீகி கதை.

கம்ப சித்திரத்திலோ இப்படிக் கதை நடத்துவதற்கு அவகாசம் இல்லாதபடி நெருக்கடி முற்றி முதிர்ந்து விடுகிறது. எனவே ராம நாமத்தைச் சொல்லி உணர்வை உருக்கிப் பிறகுதான் அனுமன் சீதையோடு உரையாட வாய்ப்பு எற்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது.

வினவும் விடையும்

தன் முகத்தைச் சீதை நன்ருகப் பார்க்குமாறு அனுமன் வணங்கி நின்ற போது,பார்க்கப் பார்க்கச் சீதையுள்ளம் அனுமன் விஷயத்தில் இரங்குகிறது. முகத்தோடு அகத்தையும் ஊடுருவுகிறது பார்வை. அந்த முகத்தில் கள்ளமில்லை யென்பது தெளிவாகிறது. இனி இவனை யாரென்று விசாரிக்க வேண்டியதுதான்.

இவனை எப்படி அழைப்பது? அந்த ராட்சஸ ராஜதானியில் எத்தனையோ கட்டுக் காவல்களைத் தாண்டிக் கொஞ்சங் கூட அச்சமில்லாமல் அங்கு வந்து நிற்கிருனே. இவன் யாராயிருந்தாலும் 'வீர ஜாதி'யைச் சேர்ந்தவன் தானே? எனவே இவள் இவனை,

'வீர, நீ யாவன்?'

என்ருள்.

இந்தக் கேள்வியிலேயே அனுமனுடைய உள்ளொளியில் உதித்த ஆலோசனைக்கு வெற்றி கிடைத்து விட்டது. பிறகு தான் வந்த வரலாற்றைக் கொஞ்சம் விவரிக்கத் தொடங்குகிருன்:

காய்கதிர்ச் செல்வன்
மைந்தன், கவிக்குலம்
அவற்றுக் கெல்லாம்
நாயகன், சுக்கி—
ரீவன் என்றுளன்,
நவையிற் றீர்ந்தான்.

[காய் கதிர்ச் செல்வன் – சுடுகிற கிரணங்களைச் செல்வமாகவுடைய சூரியன். கவிக்குலம் - குரங்குக் கூட்டம். நவையின் தீர்ந்தான் – குற்றத்திலிருந்து நீங்கியவன்.]

இப்படிச் சுக்கிரீவ மகாராஜாவைக் குறிப்பிட்ட பின், 'நான் அவனுடைய ஆளான அனுமன்' எனப் பளிச்சென்று தன்னை அறிமுகப்படுத்தி யிருக்கலாம்.

ஆனல் அனுமன், 'சுக்கிரீவனுக்கு ஓர் அண்ணன்; அவன் பெயர் வாலி' என்பதையும் தெரிவிக்கிருன். எதற்காக?


வாலியின் வெற்றியைச் சிறப்பித்த பின், அந்த வாலி வதத்தையும் தெரிவிப்பது சீதையுள்ளத்திலே எவ்வளவு தைரியத்தையும் நம்பிக்கையையும் ஊட்டியிருக்க வேண்டும்!

வாலி மரணத்தால் தம்பி சுக்கிரீவன் மகாராஜா ஆகிவிட்டான் என்கிருன். சுக்கிரீவனுடைய மந்திராலோசனைச் சபையில் தானும் ஒருவன் என்பதாகச் சொல்லித் தன்னுடைய பொறுப்பான, நம்பிக்கைக்குரிய நிலையையும் அறிவிக்கிருன்.

சீதை கேள்விக்கு விடைதான், அவளுடைய உள்ளத்திற்கு எவ்வளவு ஆறுதல் அளிக்கிறது!

சுந்தர ராமாயணம்

கணையாழியும் சூளாமணியும்



பி.ஸ்ரீ

9. "எனக்கும் விடுதலையா ?"

'**நீ** யார் ?' என்ற வினாவிற்கு அனுமன் விடை கூறியதுடன் சும்மா இருந்து விடவில்லை. அந்த நிலையில் அவளுக்கு மேலும் மேலும் நம்பிக்கையும் தைரியமும் ஊட்டுவது அவசியமென்று கருதுகிறான். இதற்கு என்ன செய்வது ?

வானளாவிய தமிழ்

'**வீ**ர, நீ யாவன் ?' என்றல்லவா கேட்டாள் சீதை ? ராமனுக்குத் துணையாக அமைந்திருக்கும் வானரர்களின் வீரச் சிறப்பு முதலியவற்றையும் சுருக்கமாகச் சொல்லுகிறான். 'உயர்வு நவிற்சி' யாகவே பேசுகிறான்.

'இத்தகைய உயர்வு நவிற்சி இன்று நின்று போய்விட்டால் நாளையே வாழ்க்கை அலுத்துச் சலித்துப் போகும் !' என்றார் ஒரு ரஸிகர் : அத்தகைய உயர்வு நவிற்சியில் உரையாடுகிறான் அனுமன் என்று கருதலாம்.

அப்படி ஆறுதல் அளிக்கும் ஆற்றல் நிறைந்த தமிழ் :

எழுபது வெள்ளம்
கொண்ட எண்ணன,
உலகம் எல்லாம்

தழுவி நின் றெடுப்ப,
வேலை தனித்தனி
கடக்கும் தாள,

குழுவின, உம்கோன்
செய்யக் குறித்தது
குறிப்பின் உன்னி

வழுவில செய்தற்(கு)
ஒத்த வானரம்,
வானின் நீண்ட !

17

[எழுபது வெள்ளம் கொண்ட எண்ணன - எழுபது வெள்ளம் என்னும் பெருந்தொகையைக் கொண்டவை. எடுப்ப – எடுக்கக் கூடியன. வேலை — சமுத்திரம். கடக்கும் தாள — கடக்க வல்ல கால்களையுடையவை. குழுவின – பெருங் கூட்டமாய்க் கூடியுள்ளன. கோன் – உமது தலைவனாகிய ராமன். குறித்தது குறிப்பின் உன்னி – கருதியதை முகக்குறி விழிக்குறி முதலிய குறிப்புக்களால் ஊகித்தறிந்து. வழுஇல செய்தற்கு - அச் செயல்களைக் குற்றம் இல்லாமல் செய்வதற்கு. ஒத்த – கருத்து ஒருமித்தவையாய். வானின் நீண்ட — வானத்தைக் காட்டிலும் நீண்டவை.]

சங்கப் புலவர் ஒருவர் காதலை வானத்தைக் காட்டிலும் உயர்ந்த தென்று சிறப்பித்திருக்கிறார். இங்கே அனுமன் ராமனுடைய துணைவலிச் சிறப்பாகிய வானர வலிமையையும் வீரத்தையும், இங்கிதம் அறியும் மதிநலத்தையும் வானினும் உயர்ந்தவை யென்று சீதையிடம் சிறப்பித்துப் பேசுகிறான்.

அத்தகைய உடல் வலிமையும் மதி வலிமையும் வாய்ந்தவர்கள் எவ்வளவு ஜாக்கிரதையாக உலகமெல்லாம் தேடித் துருவிப் பார்த்துச் சீதையின் இருப்பிடத்தைக் கண்டு பிடிக்க முயல்கின்றார் என்பதையும், உயர்வு நவிற்சியாகவே வற்புறுத்துகிறான் ;

இப்புறம் தேடி
நின்னை எதிர்ந்தில
என்னின், அண்டத்(து)

அப்புறம் போயும்
தேட அவதியின்
அமைந்து போன !



[இப்புறம்—அண்டத்தின் இப்புறத்திலோ. எதிர்ந்தில என்னின் — காணப் பெறாதனவாயின். அவதியின் — ஒரு கால எல்லையை உடன்பட்டு அதற்குள் தேடி வருவதாக. போன—போயிருக்கின்றன.]

மங்கலம் கர்த்த அணிகள்

இப்படிச் சீதையின் சோர்வினுக்கு 'வானின் நீண்ட' தமிழ்கொண்டு வைத்தியம் செய்த அனுமன், இதயத்தைத் தொத்திக் கொண்ட அவநம்பிக்கை நோய்க்கும் மருந்து கொடுக்கிறான். அரக்கன் கவர்ந்து சென்ற காலத்தில் அவள் அணிகளைச் சீலையில் முடிந்து வீசியதை நினைப்பூட்டுகிறான். நினைப்பூட்டி, அந்த முடிப்பைத் தான் எடுத்துக் காட்டி ராமனைத் தேற்றியதையும் தெரிவிக்கிறான்.

அதனால் ராமனுக்கு அனுமன் மீது விசேஷ நம்பிக்கை ஏற்பட்டதாம். ஆகவே தன்னைத் தனியே அழைத்து 'அருள் – தூத'னாக்கிக் கொண்டானாம்;

புன்தொழில் அரக்கன்
கொண்டு போந்தநாள்,
பொதிந்து தூசின்,
குன்றின் எம் மருங்கின்
இட்ட அணிகலக்
குறியி னாலே,
வென்றியான் அடியன்
தன்னை வேறுகொண்
டிருந்து கூறி,
'தென் திசை சேறி'
என்றான்; அவனருள்
சிதைவ தாமோ?

[புல்தொழில் அரக்கன் — புன்மையான, அதாவது இழிவான தொழிலையுடைய ராவணன். கொண்டு போந்த நாள் — உன்னை எடுத்துக் கொண்டு போன காலத்தில். பொதிந்து தூசின் — ஆடையில் முடிந்து. குன்றின் — ஒரு குன்றில்; எம் மருங்கின் — எமது அருகிலே. அணிகலக் குறியினால் – ஆபரணங்களின் குறிப்பினால்; அந்த அணிகலங்களை நான் எடுத்துக் காட்டிச் சொன்ன அடையாளத்தால். வென்றியான்–மனம் தேறிய வெற்றி வீரனாகிய ராமன். அடியன் தன்னை — அடியவனாகிய என்னை. வேறு கொண்டு இருந்து — தனியே அழைத்து வேறு இடத்தில் வைத்துக் கொண்டிருந்து. தென் திசை சேறி — நீ தெற்குத் திக்கை நோக்கிச் செல்வாயாக.]

முதன்முதல் சீதையிடம் ராமனுடைய 'அருள் – தூதன்' என்று தன்னை வெளியிட்டுக் கொண்டதற்குக் காரணத்தை இப்போது தெரிவித்து விடுகிறான்.

'அண்டர்நா யகன்அருள்—
தூதன் யான்'எனாத்
தொண்டைவாய் மயிலினைத்
தொழுது தோன்றினான்

என்ற அந்தச் சந்தர்ப்பத்தை இப்போது நினைப்பூட்டிக் கொள்ளலாம்.

'அந்த அருள் பழுதாகுமா? உன்னைக் காணப்பெற்றேன்' என்னும் குதூகலத்துடன் மேலும் பேசுவதைப் பாருங்கள்:

கொற்றவற்(கு) ஆண்டுக்
காட்டிக் கொடுத்தபோ(து),
அடுத்த தன்மை
பெற்றியின் உணர்தற்–
பாற்றோ? உயிர்நிலை
பிறிதும் உண்டோ?
இற்றைநாள் அளவும்
அன்னா, அன்றுநீ
இழித்து நீத்த
மற்றைநல் அணிகள்
காண்உன் மங்கலம்
காத்த மன்னோ!

[கொற்றவற்கு — வெற்றி வீரனாகிய ராமனுக்கு. ஆண்டு — அப்பொழுது. காட்டிக் கொடுத்தபோது—நான் அணிகளை எடுத்துக் காண்பித்து அவன் கையில் கொடுத்த போது. அடுத்த தன்மை — அவனுக்குநேர்ந்த நிலைமை. பெற்றியின் — நான் இப்போது பேசும் இந்த வகையால். உணர்தல் பாற்றோ — நீ கேட்டு அறிந்துகொள்ளத் தக்க

தன்மையுடையதோ. உயிர்நிலை – அவனுடைய உயிர் உடம்பிலே நிலைபெற்றிருப்பதற்குக் காரணம். பிறிதும் உண்டோ – அந்த அணிகளேயன்றி வேறொன்றும் உண்டோ. இற்றை நாள் அளவும்—இன்றைத்தினம் வரையிலும். அன்ன — அன்னையாகிய சீதையே. இழித்து நீத்த — கழற்றி யெறிந்த. மற்றை நல் அணிகள் — மற்ற நல்ல அணிகளே. உன் மங்கலம்—உனது திருமங்கலியத்தைக் காப்பாற்றின. மன்னோ – அசை.]

இப்படி உருக்கமாய்ப் பேசிச் சீதையைத் தேற்றுவது இங்கே முக்கிய நோக்கம். தான் ராமனுக்கு அந்தரங்கமானவன் என்பதைச் சாதுரியமாக வெளியிட்டது போல், அவள் கழற்றியெறிந்த அணிகளைப் பார்த்ததனாலேயே அவன் உயிர் வைத்திருக்கிறான் என்று சொல்லி ராமன் சீதை மீது கொண்டிருக்கும் ஒப்பற்ற அன்பினையும் சாதுரியமாகத் தெரிவிக்கிறான்.

பெண்களுக்கெல்லாம் திருமங்கலியம் அல்லது தாலிதான் வேறு ஆபரணங்களைக் காத்துக் கொடுக்கிறது. அதாவது, அந்த ஆபரணங்களை அணிந்து கொள்ளும் உரிமையைக் காப்பாற்றுகிறது. சீதைக்கோ மற்ற ஆபரணங்கள் திருமங்கலியத்தைக் காப்பாற்றிக் கொடுத்திருக்கின்றனவாம்.

இதை ஏதோ ஒருவகைச் சாமர்த்தியப் பேச்சு என்று கருதிவிட்டால் போதாது. 'உன் ஆபரணங்களை அன்று காணுவிட்டால் ராமன் உயிரை விட்டிருப்பான்' என்று அந்த நிலைமையை அப்படியே தெரிவிப்பதுதான் சீதைக்கு இப்போது உயிர்தரும் சஞ்சீவி. ஆனால் அதை அப்படிப் 'பச்சை'யாகச் சொல்லக் கூசுகிறான் அனுமன்,

ராமன் இறந்திருப்பான் என்பதை ராமபக்தனான அனுமன் எப்படி வாய் விட்டுச் சொல்லமுடியும்? எனவே,

மற்றைநல் அணிகள்
காண்உன் மங்கலம் 18
காத்த மன்னோ!

என்று அந்த அமங்கல வார்த்தையைச் சொல்லாமல் சொல்லி, அதையும்



சீதைக்கு ஒரு ஜயமங்களம் பாடுவது போலச் சொல்லித் தீர்த்து விடுகிருன்.

அங்கதனும் அனுமனும்

இடைசியாக,வாலி புத்திரனுகிய அங்கதனும் ராமனுக்கும் சுக்கிரீவனுக்கும் பணி செய்கிருன் என்பதையும் தெரிவிக்கிருன். வாலி வதத்தினுல் வானர வீரர்களுக்கிடையே கருத்துப் பிளவு, கட்சிப் பிளவு ஒன்றும் கிடையாது என்பதைச் சீதை உய்த்துணர வேண்டு மென்பது அனுமனின் நோக்கம்.

இங்கிதம் தெரிந்து ராம கைங்கரியம் செய்வதில் வானர வீரர் கூட்டம் கருத்தொருமித்து நடந்து கொள்கிறது என்று ஏற்கெனவே கூறியிருப்பதை வற்புறுத்துவதற்காக இங்கே அங்கதனது ராம பக்தியையும் சொல்லி முடிக்கிருன்.

அந்த வாலி மைந்தன் தன்னை இலங்கைக்கு அனுப்பியதாய்க் கூறி முடிப்பதைப் பாருங்கள் :

'ஆயவன் தன்மை
நிற்க : அங்கதன்
வாலி மைந்தன்

ஏயவன் தென்பால்
வெள்ளம் இரண்டினேடு(டு)
எழுந்து சேனை

மேயின படர்ந்து
தீர, அனையவன்
விடுத்தான் என்னைப்

பாய்புனல் இலங்கை
மூதூர்க்(கு)' என்றனன்
பழியை வென்ருன்

[ஆயவன் — அந்த ராமனது. நிற்க— இப்படியிருக்கட்டும். ஏயவன் – ராமன் கருத்திற்கு இணங்கச் சுக்கிரீவனுல் ஏவப்பட்டவனுய். தென்பால்–தெற்குத் திசையை நோக்கி. வெள்ளம் இரண்டினேடு எழுந்து சேனை – இரண்டு வெள்ளம் என்னும் பெருந்தொகையுடைய சேனையுடனே கிஷ்கிந்தையிலிருந்து புறப்பட்டு. மேயின படர்ந்து–சென்று பொருந்திய அந்தச் சேனைகள். தீர — கடலைக் கண்டதும் பின்வாங்கி நிற்க. அனையவன் – அந்த அங்கதன். விடுத்தான் — அனுப்பினுன். பாய்புனல் இலங்கை மூதூர்க்கு – அலைபாயும் இயல்புள்ள கடல் நீர் சூழ்ந்த பழமையான லங்கா பட்டணத்திற்கு. பழியை வென்ருன் – அறிஞர் பழிக்கும் இழிந்த குணங்களை வென்றவனுகிய அனுமன்.]

சொல்லின் செல்வனல்லவா? சீதையுள்ளத்திலே ஏக்கம் நீங்க, நம்பிக்கை பிறக்கச் சொன்ன சொற்கள் எவ்வளவு உவகை பொங்கச் செய்து விடுகின்றன! உள்ளம் போல் உடம்பும் பூரிக்கிறதாம்.

இதோ கவிதானுபவமாய்க் கண்டு நாமும் அந்தப் பரமானந்தத்திலே பங்கு கொள்வோம் :

எய்தவன் உரைத்த
லோடும், எழுந்துபே—
ருவகை யேற,

வெய்துறல் ஒடுங்கும்
மேனி வானுற
விம்மி ஓங்கி,

'உய்தல்வந் துற்ற
தோ?' என்(று) அருவி நீர்
ஒழுகு கண்ணுள்,

'ஐய,சொல்! ஐயன்
மேனி எப்படிக்(கு)
அறிதி?' என்ருள்.

[எய்த அவன் — (தூது) வந்த அனுமன். வெய்துறல் — வெப்பமான துன்பம். உய்தல் — (துன்பத்திலிருந்து) பிழைத்துக் கொள்வது ; விடுதலை பெறுவது. எப்படி — எந்த விதமாக.]

கவிதையுலகின் மகா வாக்கியங்களில் ஒன்று என்றும், ரஸிகருலகில் அட்சரலட்சம் பெறுமென்று மதிக்கத் தக்கதுமான ஓர் அடியைப் பேரறிஞர் திரு வ. வே. சு. ஐயர் சுட்டிக் காட்டியுள்ளார் :

'உய்தல்வந் துற்ற
தோ?' என்(று) அருவி நீர்
ஒழுகு கண்ணுள்.

இந்த நிலையில் சீதை கேட்கிருள்.

ஐயசொல் ஐயன்
மேனி எப்படிக்(கு)
அறிதி?

என்று. 'ஐயன் மேனியை எந்த விதமாக அறிகின்ருய்?' என்பது பொருள்.


'திருமேனி பாங்காயிருக்கிறதா?' என்று க்ஷேமம் விசாரிப்பதைக் கேட்டிருக்கிருே மல்லவா? 'திருமேனி நன்ருய் அழகாயிருக்கிறதா?' என்பது பொருள்.

கண்ணுரக் காண இயலாத அந்த அழகுச் செல்வத்தை இந்தச் சொல்லின் செல்வன் எடுத்துரைத்தால் கேட்டு மகிழலாமே! ஆனுல் இதுதானு சீதையின் முழு நோக்கமும்? இதுவும் ஒரு பரீட்சையாக இருக்கலாமோ?

கணையாழியும் சூளாமணியும்

சுந்தர ராமாயணம்

பி.ஸ்ரீ



10. மூன்று வார்த்தைகள்

இனி, அனுமன் சீதையை நோக்கிச் சில அடையாள வார்த்தைகள் சொல்லி அவளுடைய நம்பிக்கையை உறுதிப்படுத்த வேண்டியதுதான். ராமனுக்கும் அவளுக்கும் தெரிந்த சில முக்கியமான அடையாளச் செய்திகளை ராமன் சொல்லியனுப்பியிருந்தானல்லவா? அந்த வார்த்தைகளைச் சொல்லி விடுவதற்கு இதுவே தருணம் என்று அனுமன் கருதுகிறான். கடைசியாகக் கணையாழியைக் காட்ட வேண்டும் என்பது அனுமனின் திட்டம். இந்த இரண்டு காரியங்களும் வேகமாகவே நடைபெற வேண்டும்.

ஆனால் 'ஐயன் மேனி எப்படிக்கு அறிதி?' என்று சீதை கேட்டதற்கு விடையாக அனுமன் ராமனது திருமேனியழகை விவரமாக வருணிப்பதாய் இருபது பாடல்கள் காணப்படுகின்றன. இந்தத் திருமேனி வருணனைப் பிரபந்தத்திற்கு முன்னுரை போலவும் ஒரு பாட்டு இருக்கிறது.

சீதையின் கேள்விக்கு முதன் முதல் அனுமன் சுருங்கிய விடையாக, 'ராமனது திருமேனி உபமானம் எடுத்துச் சொல்லிக் காட்டும் தன்மையுடையதன்று. ஏனெனில் உபமானப் பொருள்கள் யாவும் ராமனது திருவுருவப் பொலிவிற்கு முன் தங்கள் உவமைத் தன்மை குன்றி நிற்கும்; அதாவது உபமானமாயிருக்கும் தன்மையைக் கொஞ்சமும் பெறமாட்டா!' என்று சொல்லித் தீர்த்து விடுகிறான்.

எனவே, இனி ராமன் சொன்ன அந்த அடையாள வார்த்தைகளைத் தெரிவிப்பதே போதும். அப்படியிருந்தும் அனுமனின் இந்தச் சொல்லை ஒரு வகை அவையடக்கமாகக் கொண்டு ராம வருணனைப் பிரபந்தம் ஒன்று பாடிச் செருகி விட்டார் யாரோ ஒரு படாடோப பண்டிதர்.

இப் பிரபந்தம் திருவடிச் சிறப்பிலே தொடங்கி ராமனது தலைரோமச் சிறப்பு வரை ஏறிச் செல்லுகிறது. அப்பால் இறங்கி நடையை வருணித்து முற்றுப் பெறுகின்றது.

இப் பாடல்களெல்லாம் கவிச்சுவையில்லாத சாமானியப் பாடல்கள். கால், கால் விரல்கள், கால் விரல் நகங்கள், புறவடி, கணைக்கால், தொடை, உந்தி இவையெல்லாம் பாடல் பெறுகின்றன — மட்டரகமான பாடல்களே.

ராமனுடைய மார்பு, கை, தோள் முதலியவற்றை வருணிக்கும்போதும் கவித்வ சக்தி வெளிப்படவில்லை. திருமுக மண்டல வருணனையிலும் குதூகலம் இல்லை; கண்களிலும் சிறப்பு இல்லை. வாய் பல், மூக்கு, புருவம், நெற்றி, குழல் என்றெல்லாம் வருணித்து, நடை குறித்த ஒரு சாமானிய வருணனையுடன் இந்தச் செருகல்-பிரபந்தம் பூர்த்தியடைகின்றது.

முதலாவது அடையாள வார்த்தை

ராமன் சொல்லியனுப்பிய அடையாள வார்த்தைகளில் மூன்றுதான்



இங்கு அனுமனால் வெளியிடப் பெறு கின்றன. இவற்றுள் முதலாவது வார்த்தை தம்பி லட்சுமணனுக்குக் கூடத் தெரியாதது.

'அங்கே நடப்பது வெகு சிரமமா யிருக்குமே, காட்டுப் பாதையல்லவா?' என்று ராமன் தொடங்கியதும், அவன் இன்னும் என்ன சொல்லப் போகிறான் என்று சீதை கவனமாய்க் கேட்டுக் கொண்டிருந்தாள்.

'நாள்கள் சிலவே!' என்று பதினான்கு ஆண்டுகளைக் கணக்கிட்டான். சீதைக்கோ பல நாள்களா யிருந்தாலும் கவலை இல்லையே!

'உன் மாமிமாராகிய என் தாய்மாருக்குப் பணிவிடை செய்து கொண்டு அது வரை நீ இங்கே இரு' என்றான் நாயகன். உடனே கோபம் பொங்கி விட்டது நாயகிக்கு

அந்த அடையாள விவரங்களை அனுமன் சொல்லச் சொல்ல இவளுக்குப் பழைய நினைவுகள் பொங்குகின்றன. மாற்று வஸ்திரம் கூட எடுத்துக் கொள்ளாமல், உடுத்த உடையோடும், உயிரையே உதறி விடுவது போன்ற உடம்போடும் கோபத்தோடும், காதலி காதலன் அருகில் வந்து நின்றதாக முதலாவது அடையாளத்தைச் சொல்லி முடித்தபோது, அது அவளுக்கு அப்போது தான் நடந்தது போலத் தோன்றியது:

நடத்தல்அரி தாகும்நெறி;
நாள்கள்சில: தாயர்க்(கு)
அடுத்தபணி செய்(து)இவண்
இருத்திஎன, அச்சொற்(கு)
உடுத்ததுகி லோடும்,உயிர்
உக்கஉட லோடும்,
எடுத்தமுனி வோடும்,அயல்
நின்றதும் இசைப்பாய்:

[நெறி - வழி. இவண்-இங்கே; அயோத்தியிலே. இருத்தி-இருப்பாய் அச்சொற்கு-அந்தச் சொல்லுக்கு. உயிர் உக்க-உயிர் சிந்திய. எடுத்த முனிவோடும் - கொண்ட கோபத்துடனேயும். அயல் நின்றதும் - அருகில் வந்து சீதை நின்றதையும். இசைப்பாய் - அடையாளமாகச் சொல்வாய்.]

'உடுத்த துகில்' இங்கே வனவாசத்திற்கென்று சீதை உடுத்து வந்த மரவுரி ஆடைதான்.

அனைய வேலை
அகன்மனை எய்தினள்;
புனையும் சீரம்
துணிந்து புனைந்தனள்
நினைவில் வள்ளல்பின்
வந்(து)அயல் நின்றனள்

[அனைய வேலை - அப்போதே. அகன்மனை - விசாலமான அரண்மனைக்குள். சீரம் - மரவுரி. நினைவில் வள்ளல் - நினைவில்லாமல் நின்று கொண்டிருந்த ராமன்.]

என்று அயோத்தியா காண்டத்தில் வருவதை இங்கே நினைப்பூட்டிக் கொள்ள வேண்டும்.

கிஷ்கிந்தா காண்டத்திலே 'நாட விட்ட படல'த்தில் ராமன் அனுமனை நோக்கி,

என்பினே போதுவான்
நினைதியோ ஏழைநீ?
இன்பமாய் ஆருயிர்க்(கு)
இனியையா யினை, இனித்
துன்புமாய் முடிதியோ
என்றதும் சொல்லுவாய்

என்று சொன்னதையும் நினைப்பூட்டிக் கொள்ளலாம்.

அதற்கு விடையாகக் கிடைத்த சீதையின் சொல்லையும் செயலையும் ராமன் அனுமனிடம் சொல்லி வைத்தானே, அந்த வார்த்தையையும் நினைப்பூட்டிக் கொள்வது நலம்:

ஆனபே ரரசிழந்(து)
அடவிசேர் வாய்உனக்(கு)
யான்அலா தனஎலாம்
இனியவோ இனிஎனா,

மீனுலா நெடுமலர்க்
கண்கள்நீர் விழவிழுந்(து)
ஊனிலா உயிரின்வெந்(து)
அயர்வதும் உரைசெய்வாய்.

[அடவி – காடு. மீனுலா நெடு மலர்க் கண்கள் - கயல் மீன் போலப் பிறழும் நீண்ட குளிர்ந்த அழகிய கண்கள்.]

இரண்டாவது அடையாளம்

சீதையின் அகத்திலே பொங்கும் உணர்ச்சிகளை ஒருவாறு முகத்திலே கண்டு கொண்டு அனுமன் இரண்டாவது அடையாளமும் சொல்லுகிறான் :

நீண்டமுடி வேந்தன்அருள்
ஏந்தி,நிறை செல்வம்
பூண்டதனை நீங்கி,நெறி
போதலுறு நாளின்,
ஆண்டநகர் ஆரையொடு
வாயில்அக லாமுன்,
'யாண்டையது கான்?' என
இசைத்ததும் இசைப்பாய்.

[நீண்டமுடி வேந்தன் – தசரத சக்ரவர்த்தி. நெறி - வழி. போதலுறு நாளின் – புறப்பட்டபொழுது. ஆரை – கோட்டை மதில். யாண்டையது – எவ்விடத்திலிருக்கிறது.]

என்று ராமன் தன்னிடம் சொன்னதாக அனுமன் விண்ணப்பித்துக் கொண்டதும், கால வெள்ளம் எப்படியோ பின்னோக்கி ஓடித் தன்னை அக்காலத்து அயோத்திக்கு அருகே கொண்டு சேர்த்து விட்டதாக எண்ணுகிறாள். ஆம், தாங்கள் பிரிந்து கொண்டிருக்கும் அந்த அயோத்திக்கு அருகே.

சக்கரவர்த்தி தமது நீண்ட ஆட்சியிலிருந்து ஓய்வு பெற உத்தேசித்து, அருமைப் பிள்ளைக்கு அரசுரிமை வழங்கினார். வசிஷ்ட மாமுனியின் ஞான புத்திரனான இந்தப் பிள்ளைக்கோ ராஜ்ய ஆசை இல்லை. எனினும் பித்ரு வாக்ய பரிபாலனமாக ராஜ்ய பரிபாலனத்தை ஏற்றுக் கொண்டான்.

ராமன் முடிசூடிக் கொண்டதாகவே நம்பினார்கள். ஆகையால் தான் ராமன் காட்டுக்கு சீதையும் பிறரும் ஆசை மிகுதியால் புறப்பட்டதும், பூண்ட முடியையும் ஆண்ட நகரையும் கைவிட்டுப் போவதாகக் கருதினார்கள்.

சீதைக்குக் காட்டைக் குறித்து ஒன்றுமே தெரியாது. ஓர் அரண்மனையிலிருந்து வேறோர் அரண்மனைக்குத் தானே யாத்திரை செய்திருக்கிறாள்?

ஆகவே கோட்டை வாசலைத் தாண்டிப் போவதற்கு முன்னமேயே, 'காடு எங்கேயிருக்கிறது?' என்று சீதை பேதைமையும் குதூகலமும் தோன்றக் கேட்கிறாள்.

இவ்வளவும் இப்போதுதான நடப்பதுபோல் அப்படியே மீண்டும்

